TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

ஜனவரி 2026

தீபம் 14 சுடர் 8

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# மரியா

## கடவுளின் தாய், திருஅவையின் ஆசிரியை

# தீபகத்திலிருந்து இறையாசீர்

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,

## புதிய ஆண்டை ஆசிரியை மரியாவுடன் தொடங்குவோம்



புதிய ஆண்டின் தொடக்கத்தில் திருஅவை நம்மை ஒரு அர்த்தமுள்ள மற்றும் அருள்நிறைந்த விழாவுக்குள் அழைத்துச் செல்கிறது, கடவுளின் தாயான மரியாவின் பெருவிழா. காலத்தின் வாசலில் மரியாவை நிறுத்தி, அவர் வழியாக நாம் புதிய ஆண்டை நம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் தொடங்க அழைக்கப்படுகிறோம். அவர் வார்த்தையைப் பெற்ற தாய் மட்டுமல்ல; அமைதியாய் கேட்கும் இதயத்தாலும், சிந்திக்கும் மனதாலும், முழுமையான கீழ்ப்படிதலாலும் திருஅவையின் ஆசிரியையாகவும் திகழ்கிறார்.

இந்த அருள்மிகு நாளில், இரண்டாம் வத்திக்கான் பேரவையின் முக்கிய ஆவணமான Gravissimum Educationis (கிறிஸ்தவ கல்வி பற்றிய அறிக்கை) நம்மை மீண்டும் சிந்திக்க அழைக்கிறது. கல்வி என்பது வெறும் அறிவுப் பரிமாற்றமல்ல; அது முழுமையான மனித உருவாக்கம், உண்மை, அன்பு, நம்பிக்கை ஆகியவற்றில் வேரூன்றிய வளர்ச்சி ஆகும். மனிதனை அவனது இறுதி இலக்கான கடவுளை நோக்கி வழிநடத்துவதே உண்மையான கல்வியின் நோக்கம்.

### குழந்தைகள் மறைக்கல்வி: கடவுளின் பிள்ளைகளாய் வளருதல்

அன்பார்ந்த குழந்தைகளே,

மறைக்கல்வி என்பது ஒரு வகுப்பு மட்டுமல்ல; அது இயேசுவுடன் நட்பாக வளர்வதற்கான ஒரு அழகான பயணம். மறைக்கல்வியின் வழியாக, கடவுள் யார், அவர் உங்களை எவ்வளவு நேசிக்கிறார், நீங்கள் எப்படி வாழ அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை அறிகிறீர்கள். நாசரேத்து மரியாவைப் போல, கடவுளின் வார்த்தையை கவனமாகக் கேட்டு, இதயத்தில் நிறுத்தி, சேமித்து, மகிழ்ச்சியுடன் வாழ நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள்.

Gravissimum Educationis ஆவணம், குழந்தைகள் நல்லொழுக்கங்களிலும் கடவுளின் அன்பிலும் வளர உரிமை பெற்றவர்கள் என்று வலியுறுத்துகிறது. உங்கள் ஜெபங்கள், திருவிவிலியக் கதைகள், பாடல்கள், செயல்பாடுகள், இவையனைத்தும் உங்களை நல்ல மனிதர்களாக, உண்மையுள்ளவர்களாக, அன்புள்ளவர்களாக உருவாக்குகின்றன. உங்கள் இன்றைய நம்பிக்கை ஒரு சிறிய விதை. அதை நன்றாகப் பாதுகாத்தால், அது திருஅவைக்கும் உலகத்திற்கும் நிழலளிக்கும் பெரிய மரமாக வளரும்.

### இளைஞர் மறைக்கல்வி: மனச்சாட்சி மற்றும் துணிவை உருவாக்குதல்

அன்பார்ந்த இளைஞர்களே,

திருஅவை உங்களை மிகுந்த நம்பிக்கையுடன் பார்க்கிறது. வாய்ப்புகளும் சவால்களும் நிறைந்த இக்காலத்தில் நீங்கள் வாழ்கிறீர்கள். கிறிஸ்தவ மறைக்கல்வி உங்கள் மாண்பை உணரவும், நல்ல மனச்சாட்சியை உருவாக்கவும், நற்செய்தியை

அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை எடுக்கவும் உதவுகிறது. அதனால்தான் திருத்தந்தை உங்களை திருஅவையின் எதிர்காலம் மட்டுமல்ல, நிகழ்காலமும் நீங்கள் தான் என்று கூறுகிறார்.

இளைஞர்கள் பொறுப்புள்ள மனிதர்களாக வளர வேண்டும் என்றும், சமூக வாழ்வில் செயலில் ஈடுபட வேண்டும் என்றும் (ஆயர்) பேரவை அறிவுறுத்துகிறது. "உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக். 1:38) என்று மரியா சொன்னதுபோல், உங்கள் கல்வி, நட்பு, தொழில்நுட்பப் பயன்பாடு, ஏழைகளுக்கான அக்கறை, நீதி மற்றும் அமைதிக்கான அர்ப்பணிப்பு ஆகிய அனைத்திலும் கடவுளுக்கு உங்கள் "ஆம்" என்பதை வழங்க அழைக்கப்படுகிறீர்கள். மறைக்கல்வி உங்களை நம்பிக்கை கொண்டவர்களாக மட்டுமல்ல, நம்பிக்கையின் சாட்சிகளாகவும் உருவாக்குகிறது.

## வயது வந்தோருக்கான மறைக்கல்வி:<br>முதிரும் நம்பிக்கை, மாற்றம் தரும் வாழ்வு

அன்பார்ந்த பெரியவர்களே,

கிறிஸ்தவ கல்வி குழந்தைப் பருவத்தோடு முடிவதில்லை; அது வாழ்நாள் முழுவதும் தொடரும் பயணம். வேகமாக மாறும் உலகில், குடும்ப வாழ்க்கையும் சமூக பொறுப்புகளும் நற்செய்தி மதிப்புகளால் வழிநடத்தப்பட வேண்டும். வயது வந்தோருக்கான மறைக்கல்வி, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் முதல் ஆசான்களாக மாற உதவுகிறது மற்றும் குடும்பங்களை "வீட்டுத் திருஅவைகளாக" வலுப்படுத்துகிறது.

Gravissimum Educationis ஆவணம், பெற்றோர்களும் குடும்பமும் கல்வியின் முதன்மை இடம் என தெளிவாகக் கூறுகிறது. பெரியவர்கள் நம்பிக்கையில் வளரும்போது, அவர்கள் அடுத்த தலைமுறைக்கு உயிருள்ள சாட்சிகளாக மாறுகிறார்கள். வயது வந்தோர் மறைக்கல்வி, கிறிஸ்துவுடன் உங்கள் உறவை புதுப்பித்து, உண்மை, அன்பு, கருணை ஆகியவற்றால் சமூகத்தை மாற்ற உங்களைத் தயாரிக்கிறது.

## மரியா : கடவுளின் தாய், திருஅவையின் ஆசிரியை

புதிய ஆண்டின் தொடக்கத்தில் மரியா நமக்கு நினைவூட்டுகிறார்: உண்மையான கல்வி என்பது கடவுளைக் கேட்பதும், அவரது வார்த்தையை சிந்திப்பதும், அதை வாழ்வில் நடைமுறைப்படுத்துவதுமாகும். அவர் பல வார்த்தைகளால் போதிக்கவில்லை; ஆனால் அவரது வாழ்வே நம்பிக்கை, பணிவு, கீழ்ப்படிதல், அன்பு ஆகியவற்றின் ஒரு உயிருள்ள பாடமாக மாறியது.

2026ஆம் ஆண்டில் நாம் பயணிக்கும்போது, குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் என அனைத்து மறைக்கல்வியும் மரியாவின் முன்மாதிரியாலும் திருஅவையின் பார்வையாலும் வழிநடத்தப்படுவதாக இருக்கட்டும். அறிவை மட்டும் அல்ல, நம்பிக்கையால் ஒளிரும் இதயங்களை உருவாக்கும் கல்வியாக அது மாறட்டும்.

கடவுளின் தாயும் திருஅவையின் ஆசிரியையான மரியா, நமது மறைக்கல்வி பணியை ஆசீர்வதித்து, இந்த புதிய ஆண்டில் நம் அனைவரையும் கிறிஸ்துவின் நிறை வாழ்வை நோக்கி நம்மை வழிநடத்தட்டும்.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.01.2026 | கன்னி மரியா இறைவனின் தாய் பெருவிழா- திருப்பலி | 06 |
| 03.01.2026 | இயேசுவின் தூய்மைமிகுபெயர் - திருப்பலி | 07 |
| 04.01.2026 | ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா - திருப்பலி | 09 |
| 11.01.2026 | ஆண்டவரின் திருமுழுக்கு விழா- திருப்பலி | 10 |
| 14.01.2026 | புனித தேவசகாயம் பிள்ளை - திருப்பலி | 12 |
| 15.01.2026 | அருளாளர் அலோசியஸ் வரியாரா - திருப்பலி | 13 |
| 15.01.2026 | பொங்கல் விழா - திருப்பலி | 14 |
| 17.01.2026 | புனித வனத்து அந்தோணியார் - திருப்பலி | 16 |
| 18.01.2026 | பொதுக்காலம் 2ம் ஞாயிறு - திருப்பலி | 17 |
| 22.01.2026 | அருளாளர் லவுரா விகூஞா - திருப்பலி | 18 |
| 24.01.2026 | புனித பிரான்சிஸ்கு சலேசியார் - திருப்பலி | 20 |
| 25.01.2026 | பொதுக்காலம் 3ம் ஞாயிறு - திருப்பலி | 21 |
| 26.01.2026 | இந்திய குடியரசு நாள் - திருப்பலி | 22 |
| 26.01.2026 | புனித திமொத்தேயு, தீத்து - திருப்பலி | 24 |
| 30.01.2026 | அருளாளர் பொரொனிஸ்லாவ் மார்க்குவிச்- திருப்பலி | 25 |
| 31.01.2026 | புனித தொன் போஸ்கோ விழா | 26 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| புனித பிரான்சிஸ்கு சலேசியார்-வாழ்வும் பாடமும் | 29 |
| புனித தொன் போஸ்கோவின் வாழ்வில் மரியன்னை | 31 |
| புனித தேவசகாயம் பிள்ளை - வாழ்வு தரும் பாடங்கள் | 34 |
| திருஅவைச் செய்திகள் | 37 |

பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# இறைவனின் அன்னையாகிய தூய கன்னிமரியா பெருவிழா

திருப்பலி
01.01.2026

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

I. *எண்: 6: 22-27* II. *கலா. 4: 4-7* *லூக். 2: 16-21*

2026ம் ஆண்டு புது விடியலின் வெள்ளிக் கீற்றாய் ஒளிர வருகையில், நாம் உரிய தயாரிப்புடன் வரவேற்போம். கன்னிமரியா இறைவனின் தாய் என மரியாவைப் போற்றியும், இயேசு என்னும் பெயரால் முதன் முதலாக அழைக்கப்பட்ட இறைமகனாம் இயேசுவைப் புகழ்ந்து, களிப்புறும் நாள் இது. இவ்வாண்டின் துவக்கத்திலே எண்ணாகமம் 6: 24-26-ல் கூறப்பட்டது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு இறையாசீரும், அருளும் பொழியப்படுவதை உணர்கிறோம். இப்படிப்பட்ட அருளும் ஆசீரும் ஆனந்தமும் இன்று மட்டுமிருந்து நாளை மறைந்து விடக்கூடியவை அல்ல. அப்படி மறைந்து விடும்படி நாம் நடந்து கொள்வதும் கூடாது. அன்னை மரியா போன்றே வாழ்வில் இறைவன் நமக்கு அருளும் கொடைகளை, அவர் நமக்கு செய்த நன்மைகளை, அவர் நமக்குக் காட்டும் வழிகளை மறந்துவிடாமல், அவற்றை வாழ்நாள் முழுவதுமாகக் கடைப்பிடித்து நல்லதொரு வாழ்வை வாழ்ந்திட உறுதியேற்போம்.

பிறந்துள்ள 2026ம் ஆண்டானது நமக்கு மட்டுமல்ல, இவ்வுலக மாந்தர் அனைவரது வாழ்விலும் அமைதியை, மனநிறைவை, மகிழ்வைத் தரக்கூடிய ஆண்டாக விளங்கிட நமக்காக என்றும் பரிந்துரைக்க தயாராக இருக்கும் நம் இறைவனின் அன்னை மரியாவின் மூலமாக இறைமகன் இயேசுவிடம் செபிப்போம். கடந்த ஆண்டு நடைபெற்ற வன்முறைகள், கசப்பான நிகழ்வுகள் அனைத்தும், பிறந்திருக்கும் இப்புத்தாண்டில் நேராமலிருக்க இறைவன் துணைபுரியவேண்டுமென்று மன்றாடுவோம். இவ்வாண்டு, நாம் வாழும் இப்புவியை கடும் இயற்கை சீற்றங்களினின்று கடவுள் காத்தருளுமாறும், தேவையான பருவ மழையையும் நல்ல விளைச்சலையும் தந்து நம் அனைவரையும் தம் அருளினால் நிரப்புவராக என்று இப்புதிய ஆண்டின் துவக்கத்தில் செபித்தும், நமது புனித வாழ்வுக்குத் தடையாயுள்ள தவறான சிந்தனைகள், கொள்கைகள், மதிப்பீடுகள், அணுகுமுறைகள், உறவுமுறைகள், செயல்பாடுகள் இவற்றை இனங்கண்டு வேரறுத்து ஒதுக்கி, நம் வாழ்வில் அன்பு, அருள், தூய்மை, வாய்மை, நேர்மை, சேவை, தியாகம், அர்ப்பணிப்பு போன்ற நற்பண்புகளால் நம்மை அலங்கரித்து வாழ்வோம் என உறுதியளித்து, பக்தியோடு இன்றைய புத்தாண்டுத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நான் உங்களுக்கு ஆசி வழங்குவேன் எனக்கூறிய இறைவா, கத்தோலிக்க திருஅவையை வழிநடத்தும் எம் நேசமிகு திருத்தந்தை

லியோ, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர் மற்றும் திருநிலையினர் அனைவரும் தத்தம் பணிகளுக்கேற்ப செயல்படாமல் தாம் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து செயல்படத் தேவையான அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. என்றென்றும் வாழும் இறைவா, எங்கள் வாழ்க்கையில் பணம், பதவி, அதிகாரம் இவற்றைக் கொண்டு நாட்டிலுள்ள ஏழை எளியமக்களை தங்களின் வசதிவாய்ப்புகளைப் பயன்படுத்தி அடிமைகளாக நடத்தாமல், தன்னுடைய சகோதர சகோதரிகளாக பாவித்து நடத்தக்கூடிய நல்லுள்ளம் கொண்டவர்களாக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உரிமைப் பேற்றைத் தந்த உத்தமரே இறைவா, நீர் எங்களுக்கு அன்றாடம் செய்துவரும் நன்மைகளுக்கு நன்றி செலுத்தவும், இந்த நம்பிக்கையின் பலன்களை எங்கள் பிள்ளைகளுக்கு கற்பித்து ஞானவாழ்வில் அவர்களை வளர்க்கவும், பெரியவர்களின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இறைஞானத்தில் சிறந்தவர்களாக வாழ அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## இயேசுவின் தூய்மைமிகுபெயர், புனித குரியாக்கோஸ் எலியாஸ் சவேரா

திருப்பலி
03.01.2006

### முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவில் இனியோரே, இன்றைய தினம் நமது திருஅவை புனித குரியாக்கோஸ் எலியாஸ் சவேரா என்ற புனிதரின் நினைவு நாளை சிறப்பிக்க நாம் ஒன்று கூடியுள்ளோம். நமது புனிதர் கேரள மாநிலத்தில் கைகைரி என்னும் இடத்தில் மேரி சவேரா, குரியாக்கோஸ் இவர்களுக்கு 1805ம் ஆண்டு பிப்ரவரி 10ம் நாள் பிறந்தார். இவர் 1829, நவம்பர் 29ம் நாள் தனது 24 வயதில் குருப்பட்டம் பெற்றவர். "மானானம்" என்ற இடத்தில் தேவாலயமும், ஆசிரமும் கட்டி ஒரு சபையைத் தொடங்கி, அதற்கு "அமலோற்பவ மாதாவின் கார்மேல் சபை" என்று பெயரிட்டார். இதற்காக அவர் அதிகமாக முயற்சியெடுக்க வேண்டியிருந்தது. கல்விக்காக பெரும்பணி ஆற்றியவர். இவர் நிறுவிய முதல் கத்தோலிக்க அச்சகமும், அனாதை குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கான கருணை இல்லம் இன்றுவரை "உபவிசாலா" என்ற பெயரில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது.

ஒவ்வொரு பங்கு தளங்களிலும் ஒரு கல்வி கூடம் இருப்பது அவசியம் என்று செயலாற்றியவர். கேரளாவில் முதன்முதலில் மருத்துவக் கல்லூரியை

ஏற்படுத்தியவர். துறவற சபைகளின் பொது ஒழுங்குகளையும், கோட்பாடுகளையும் பெரிதும் மதித்த இவர் அதன்படி செயல்பட்டவர். இந்திய வம்சா வழியின் முதல் புனிதரான இவர் தனது 66ம் வயதில் 03.01.1984ல் இறைவனிடம் அடைக்கலம் புகுந்தார். 1984 ஏப்ரல் 4ம் நாள் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் இவரை புனிதர் நிலைக்கு உயர்த்தினார்.

இந்தியாவில் கத்தோலிக்க திருஅவை வேரூன்றி வளரவும், அதற்கு தேவையான துறவிகளை இந்தியாவில் உருவாக்கவும், அரும்பாடுபட்டவர் நமது புனிதர் குரியாக்கோஸ் எலியா சவேரா. இவரின் நற்செயல்களை சிந்தித்த வண்ணமாய் நாம் இத்திருப்பலியில் அவருக்காகவும் நாமும் அவரின் வாழ்வைப் பின்பற்றி வாழ தேவையான வரங்களை நமக்கு அளித்தருள வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. கிறிஸ்து அரசரே, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் புனித குரியாக்கோஸைப் போல பின்தங்கிய நாடுகளுக்கு இயேசுவின் நற்செய்தியை மக்களுக்கு எடுத்துரைக்கும் பணியில் சிறந்து விளங்க அவர்களுக்குத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் இவ்வாண்டு முழுவதும் செயல்படுத்தும் செயல்முறைகளை தூய ஆவியாரின் துணையோடு செயல்படுத்த உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. சமத்துவத்தின் நாயகனே இறைவா, மனிதத்தின் ஏற்றத் தாழ்வுகளை களைந்து சாதி, மொழி, நிறம் இவைகளை கடந்து, எல்லா நன்மைகளும் எல்லோருக்கும் கிடைக்கும்படி செயலாற்ற நம் நாட்டுத் தலைவர்களுக்கு வழங்கி, மக்களை ஏற்றத்தாழ்வுகள் பாராமல் ஏழைகள், விதவைகள், கைவிடப்பட்டோருக்கு உதவி செய்யும் நல்மனதினை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, இயற்கை சீற்றத்தின் தாக்கத்தினால் துயருற்று கலங்கி வேதனையுடன் அவதியுறும் மக்களின் அவலநிலையை மாற்ற, பொருளுதவியும், பண உதவியும் அளிக்கக்கூடிய நல்ல உள்ளத்தினரை இனம்காட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கையின் இறைவா, கருணை இல்லங்களை அமைத்து முதியோருக்கும், அனாதைகளுக்கும் புனித குரியகோஸ் உதவியதுபோன்று எம் நாட்டில் இயங்கிவரும் முதியோர், அனாதை இல்லங்களுக்கு உமது அருளால் பொருளுதவியும், அருளாசீரும் நிறைவாக கிடைக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா

திருப்பலி
04.01.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *எசா. 60: 1-6* II. *எபே. 3: 2-3, 5-6* *மத். 2: 1-12*

இறைமகன் இயேசுகிறிஸ்துவின் பிரியமான சகோதர சகோதரிகளே, நமக்காக பிறந்துள்ள கோமகனின் திருக்காட்சியைக் கண்டுக்களிக்க, நெஞ்சமெல்லாம் நிறைந்த மகிழ்வுடன் ஆலயம் வந்திருக்கும் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம். உரோமானியக் கலாச்சாரத்தில் பேரரசரின் பிறப்பு அல்லது வருகையை சுட்டிக்காட்டுவதற்கு "திருக்காட்சி" என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இவ்விழாவில் நான்கு சிறப்புகள் உள்ளன. அவை இயேசுவின் பிறப்பு, திருமுழுக்கு, ஞானிகளின் வருகை, கானாவூர் திருமணம் ஆகும். முதல் வாசகத்தில் எசாயா, மெசியா வந்து உலகின் இருளைப்போக்கி தம் ஒளியால் உலகை நிரப்புவார் என்பதை எடுத்துக் கூறுகிறார். நம் உள்ளத்தின் இருளை அகற்ற நம் மீட்பரைக் காணச்செல்வோம். இரண்டாம் வாசகத்தில் எபேசியருக்கு எழுதப்பட்ட நூலில் இயேசு வழங்கிய மீட்பு யூதருக்கு மட்டுமல்ல மாறாக யூதரல்லாதவருக்கும் பொருந்தும். இயேசுவின் மீட்புச்செயல் அனைவருக்கும் உரியது. இந்த வாசகத்தின் மூலம் இன்றைய திருவிழா கருத்து மீட்பரை புறஇனத்தவரான ஞானிகள் கண்டு கொண்டதை தெளிவுப்படுத்துகிறது.

ஞானிகளின் வருகையை மத்தேயு நற்செய்தியில் கூறப்படுவது, இவர்கள் அரசர்களா? ஞானிகளா? குருக்களா? என்ற கேள்விகள், நம்மிடையேயும் எழுகிறது. பொதுவாக இந்தத் திருவிழாவை "மூன்று அரசர்கள் திருவிழா" என்று நாம் அழைக்கின்றோம். இவர்கள் எத்தனைபேர் என்று தெரியாது. ஆனால் அளிக்கப்பட்ட காணிக்கைகள் மூன்று. இவர்கள் கஸ்பார், மெல்கியோர், பல்தசார் என்று அறியப்படுகிறார்கள். இதில் குறிப்பிடப்பட்டுள்ள மூவரும் புறஇனத்தார் புறஇனத்தாரின் பிரதிநிதியாக மீட்பரிடம் வந்து காணிக்கை செலுத்தி வணங்கிச் சென்றனர். இந்நிகழ்வு

மூன்று காரியங்களைப் பற்றி சிந்திக்க அழைக்கிறது. ஒன்று தேடல், இரண்டு கண்டடைதல், மூன்று ஆனந்தம். பெறுதல் தேடல் ஒன்றே வாழ்விற்கு நம்பிக்கை அளிக்கிறது. கண்டடைதல் இல்லையென்றால் தேடல் அர்த்தமற்றதாகி விடுகிறது. மீட்பரைக் கனிவுடன் மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்துடன் காணவேண்டும். இத்திருவிழா மீண்டுமாக நமக்கு ஒரு முக்கியமான நிகழ்வை தெரியப்படுத்துகிறது. மூன்று ஞானிகளும் மீட்பரைக் கண்ட பின்பு பாதை மாறிச்சென்றனர் என்று. நமது வாழ்க்கையிலும் பாதைமாறி சென்றிருந்திருந்தால், அப்பாதையை விட்டுவிலகி இறைவனின் பாதையை நோக்கி நம் வாழ்வை தொடர்வோம், இறைவனில் சங்கமிப்போம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. ஒளியின் பிறப்பிடமாகிய விண்ணகத் தந்தையே, உமது திருமகனின் திருக்காட்சிப் பெருவிழாவை கொண்டாடும் உமது திருஅவையானது, திருமகன் கொண்டுவந்த நற்செய்தியை உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் அறிவித்து வழிநடத்திவரும் திருஅவைத் தலைவர்கள் அனைவரும் உமது தூய ஆவியின் கனிகளால் ஒவ்வொருவரையும் நிரப்பி இவ்வாண்டு முழுவதும் காத்து வழி நடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகையாளும் உன்னதரே எம் இறைவா, நாட்டுத்தலைவர்கள் அனைவரும் தங்களது குடும்பம், உறவினர்கள், இனம், மதம் என்று பார்த்து ஆட்சி செய்யாமல் எல்லா மக்களுக்கும் உரிய நல்லாட்சியை வழங்கிட வேண்டுமென்றும், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் காக்கப்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, உலகிலுள்ள குழந்தைகள் அனைவரையும் உம் பதம் சமர்பிக்கின்றோம். உமது குழந்தையுள்ளத்தை எம் குழந்தைகளுக்கும் அளித்து, பெற்றோரின் கீழ்ப்படிதலுக்கு உகந்த வழியில் நடக்கவும், இறையழைத்தலுக்கான தயாரிப்பில் நாளும் வளரவும், தங்களின் வாழ்நாள் முழுவதும் உம்மைப்போன்று ஞானத்திலும், ஒழுக்கத்திலும், கல்வியிலும், இறைபக்தியிலும் சிறந்தவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. உங்களுக்குச் சொன்ன யாவற்றையும் கடைப்பிடியுங்கள் என்று கூறிய தந்தையே, எங்களிடையே உள்ள போட்டி, பொறாமை, காழ்ப்புணர்ச்சி, பகைமை, விட்டுக்கொடுக்காமை, பழிவாங்கத் துடிக்கும் எண்ணம், போன்றவற்றை எங்களின் உள்ளத்தின் இருளகற்றி நாங்கள் உமது எதிர்நோக்கின் பயணிகளாக் எங்களின் குடும்பங்களும், எங்களைச் சுற்றியுள்ள மக்களையும் உம்பாதையில் பயணம் தொடர உம் தூய ஆவியாரின் துணையோடு எங்களை நாளும் வழிநடத்தி காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# ஆண்டவரின் திருமுழுக்கு விழா

திருப்பலி
11.01.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *எசா. 42: 1-4, 6-7* II. *தி.ப. 10: 34-38* *மத். 3: 13-17*

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, இறைமகன் மானிட மகனாக இறைச்சித்தத்திற்கு தன்னை ஒப்புவித்து மூன்றாண்டு காலப்பணிவாழ்வின் தொடக்கமாக இந்நாள் அமைகின்றது. மனிதர்கள்

எப்பொழுதும் தன் நிலையில் தன்னைவிட உயர்வானவர்களிடமே அருளாசீரைப் பெற விரும்புவார்கள். ஆனால் இறைமகன் இயேசு தன்னிலையை மறந்து எளிமையான புனித திருமுழுக்கு யோவானைத் தேடிச் சென்ற திருமுழுக்குப் பெற்றார். இயேசு திருமுழுக்குப் பெற்றவுடனே வானம் திறந்து கடவுளின் ஆவி அவர்மீது வந்து இறங்கியது. அப்பொழுது என் அன்பார்ந்த மகன் இவரே இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன் என்ற குரல் வானிலிருந்து ஒலித்தது. இத்திருமுழுக்கின் வழியாக வரவிருக்கின்ற மெசியா இறைமகன் இயேசு என்பதை உலகிற்கு அறிவிக்கப்பட்டது. இறைமகன் இயேசுவின் வழியாக திருமுழுக்குப் பெற்றவர்களின் குணநலன்களும் மனநலன்களும் எவ்வாறு இருக்கும் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு விளக்குகின்றது.

திருமுழுக்கு நம் பிறப்பு நிலை பாவத்தைப் போக்கும் அருமருந்து. பிறப்பு நிலைப் பாவமே அற்ற இறைமகன் யோர்தானில் திருமுழுக்குப் பெற்று மானிட தன்மையின் முன்மாதிரியை நமக்கு வழிக்காட்டிச் சென்றுள்ளார். திருமுழுக்கு வாழ்நாளில் திரும்ப திரும்பப் பெறமுடியாத அருளடையாளம். ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் திருஅவைக்குள் இறையேசுவின் பிள்ளைகளாக அங்கீகரிக்கப்பட இவ்வருளடையாளம் நமக்கு அருளப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பிள்ளைகளாக திருமுழுக்கின் பொருள் உணர்ந்தவர்களாய் தங்கள் வாழ்வை கடவுளின் சித்தத்தின்படி வாழ கையளிப்போம். கடவுளை அப்பா தந்தையே என அழைக்கும் உரிமையை திருமுழுக்கு அருளடையாளம் வழியாக பெற்ற நாம் இறைபணியாற்றுவது எம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் என்பதை உணர்ந்தவர்களாய் இப்பயணத்திற்கு வேண்டிய ஆற்றலை நாம் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் இணைந்து, இறையாசீர் பெற்று புதிய மனிதர்களாக வாழ பக்தியோடு பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நீதியின் தலைவரே எம் இறைவா, இறையேசுவின் பணியே நம் வாழ்நாளின் பணி என்று தங்களையே திருஅவைக்காக அற்பணித்த எம் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவர்மீதும் உம் தூய ஆவியாரின் அருட்பொழிவைப் பொழிந்திடவும், இறையரசைக் கட்டியெழுப்பும் பணியில் சோர்வின்றி பயணித்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இறையேசுவின் வழியாக அமைதியுண்டு என்றுரைத்த எம் இறைவா, இன்று உலகமெங்கும் அமைதியென்ற வார்த்தையின் பொருள் மறந்து போர், வன்முறை, கலவரம் போன்றவற்றை செய்வதோடு மட்டுமல்லாமல் பொன்னையும், மண்ணையும் தாங்கள் பெற்று அனுபவிக்க, மற்றவர்களின் பொருளுக்கு ஆசைப்பட்டு கொலை, கொள்ளை போன்ற தீயவழியில் நடக்கின்றவர்களை நீரே மன்னித்து அவர்களின் மனநிலையை மாற்றி நீரே நல்வழிக் காட்டியாக இருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உம் மந்தையாகிய எங்களை பாதுகாப்பவரே எம் இறைவா, உலகில் வாழும் மக்களில் யாருமில்லாத அநாதைகள், பெற்றோர்கள், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களை இழந்து தவிப்போருக்கும், நோயினாலும், கடன் பிரச்சனையாலும், பலவிதமான தொந்தரவுகளாலும் தவிப்போருக்கு நீரே நல்வழிக் காட்டியாக இருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

## புனித தேவசகாயம் பிள்ளை

திருப்பலி
14.01.2026

### முன்னுரை

*திரு.T. சாம்சன்*

இறையேசுவில் பிரியமானவர்களே, நாம் பெருமைப்பட வேண்டிய நாள் இன்று. ஏனென்றால் தேவசகாயம் பிள்ளை தமிழகத்தின் புனிதரும், இந்தியாவின் முதல் பொதுநிலையினர் மறைசாட்சியும் ஆவார். இவர் தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டாலம் என்னும் கிராமத்தில் இந்து குடும்பத்தில் பிறந்தார். இவரின் இயற்பெயர் நீலகண்ட பிள்ளை. செல்வ செழிப்பான குடும்பம் என்பதால் அரச குடும்பத்தில் எளிதாக பழகுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதன்மூலம் போர்வீரர், கோவில் பணியாளர், அரச கருவூல அலுவலர் என்று பல்வேறு பணிகளைச் செய்தார். பார்கவியம்மாள் என்பவரை இவர் திருமணம் செய்து இல்லறம் நடத்தி வந்தார். ஒரு காலகட்டத்தில் இவருக்கு பெனடிக்ட் டிலனாய் என்னும் கத்தோலிக்க ராணுவ அதிகாரியிடம் தொடர்பு ஏற்பட்டது. அதன்மூலம் இயேசுவை அறிந்து கொண்டார். இன்னும் அதிகமாக இயேசுவை தெரிந்து கொள்ள அருள்தந்தை பீட்டர் ரோஸ் சே.ச என்பவரை சந்தித்து மேலும் விளக்கம் பெற்றார். அருள்தந்தை ஜான் பாப்டிஸ்ட் புத்தாரி என்பவரால் 1745, மே 14 அன்று தேவசகாயம் (லாசர்) என்று திருமுழுக்கு பெற்றார்.

கிறிஸ்தவர்களுக்கு எதிராக தூண்டப்பட்ட மன்னரால் 1749, பிப்ரவரி 23ல் கைது செய்யப்பட்டு மிகுந்த கொடுமைகளுக்குள்ளாகி, பல்வேறு இன்னல்களை கிறிஸ்துவுக்காக அனுபவித்தார். காற்றாடி மலையில் 1752 ஜனவரி 14ம் நாள் நள்ளிரவில் தேவசகாயத்தை சுட்டு கொன்றார்கள். இவரை 16ம் ஆசிர்வாதப்பர் அருளாளர் நிலைக்கு உயர்த்தி, 2012 டிசம்பர் 2ம் தேதி அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற திருப்பலியில் திருத்தந்தையின் பிரதிநிதி கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ, அதை அறிக்கையிட்டார். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாமும் இவரின் இறைநம்பிக்கையை பக்தியைப் பின்பற்றி வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. என்றும் வாழும் தந்தையே, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்தறிந்து நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை

எல்லா கால கட்டங்களிலும் விளக்கி உரைப்பது நம் கடமை என உணர்ந்து செயல்பட வேண்டுமென்று அருளாளர் தேவசகாயம் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் நாயகனே இறைவா, நாட்டின் அமைதிக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஊறுவிளைவிக்க கூடிய பல அபாயகரமான செயல்கள், வன்முறைகள், செயலிழந்து போகவும் மக்கள் அனைவரும் அமைதியுடன் வாழவும் வேண்டி அருளாளர் தேவசகாயம் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர்களாகிவிட்டோம் என்று மனநிறைவு பெறாமல் பெற்ற திருமுழுக்கின் மூலமாக பெற்றுக்கொண்ட தூய ஆவியின் வழிநடத்துதலோடு நற்செய்திக்கு சான்று பகரும் மக்களாக வாழும் அருள்வாழ்வை தந்திட வேண்டுமென்று அருளாளர் தேவசகாயம் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## அருளாளர் அலோசியஸ் வரியாரா

திருப்பலி
15.01.2026

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறைவன் தம் வல்லமையினாலும் ஞானத்தினாலும் படைத்த இயற்கை வளங்களுக்காகவும், கால்நடைகளுக்காகவும் விண்ணிலும் மண்ணிலும் தோன்றும் அதிசயமான படைப்புகளுக்காக நாம் இன்று நன்றி கூறுகின்றோம். பழைய ஏற்பாட்டில் மக்கள் தங்களின் முதல் விளைச்சலை இறைவனுக்கு நன்றிபலி செலுத்தியதை காண்கிறோம். இன்று தமிழர்கள் அனைவரும் சிறப்பாக கொண்டாடும் பொங்கல் திருநாளிலும் உழவர்களும், பொங்கல் விழாவினை சிறப்பிப்பவர்களும் தங்களின் உழைப்பின் பயனாக கிடைத்தவைகளை நன்றியோடு இறைவனுக்கு படைப்பதை அறிவோம். எனவே, இந்த நன்னாளிலே "பழையன கழிந்து புதியன புகுதல்" என்ற சொற்களுக்கேற்ப நம்மிடமுள்ள தேவையற்ற எண்ணங்கள், பழக்கவழக்கங்கள், செயல்கள் இவைகளை களைந்து புதிய நல்ல பண்புகளை நம்மில் உருவாகவும், இறைவன் நமக்கு கொடுத்த அனைத்து இயற்கை வளங்களுக்கும் கால் நடைகளுக்கும் நன்றி சொல்லவும், தமிழர் திருநாளான இன்று சாதி, மதம், இனம், மொழி, ஏழ்மை, கல்லாமை போன்ற பாகுபாடுகளைக் களைந்து அனைவரோடும் நல்ல உறவினை வளர்க்கக் கூடிய நல்ல மனதைத் தரும்படியும் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் தங்களது மறைப்பரப்புப் பணியிலே இளைஞர், இளம் பெண்களுக்கு கிறிஸ்துவ நம்பிக்கை, மகிழ்ச்சி, பிறரன்பு

சேவை, அறநெறி வாழ்வு ஆகியவற்றின் சிறந்த மதிப்பீடுகளை எடுத்துரைத்து அதன்வழியாக இன்றைய இளைய தலைமுறையினரை இறைபக்தியிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைவனில் சங்கமிக்க, இறைச்சாயலை பெற்றிருக்கும் இளையச் சமுதாயமே, இளைஞர் இளம்பெண்கள் இறைவார்த்தையின் வலிமையினால் கிறிஸ்துவின் உயிர்தரும் பிரசன்னத்தில் நிலைத்திருந்து, தங்களையே சமுதாயத்திற்கு அர்ப்பணிப்பதன் மூலம் சுதந்திரம், நீதி, அமைதியை ஏற்படுத்தி, கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ தூய ஆவியாரின் அருளைப்பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இங்கு கூடியுள்ள நாங்கள் அனைவரும் புனிதமானதும், நற்கனி தருவதும், தியாகமானதுமாகிய திருத்தூது வாழ்வை நாங்களும் வாழ்ந்து உமது அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து இறைத்தந்தையின் திருவுளத்திற்கேற்ப உண்மையுள்ளவர்களாக வாழவும், இந்த நற்கருணைப் பகிர்வில் உண்மையான வாழ்வளிக்க வாழ உம் அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை உன்றாடுகிறோம்.

## பொங்கல் விழா

திருப்பலி
15.01.2026

### முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

அன்பார்ந்த இறைமக்களே, தமிழர்களாகிய நாம் இன்று அறுவடைத் திருநாளான பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்கிறோம். மனிதருக்கு உணவு வழங்கும் இயற்கைக்கு நன்றி செலுத்துகின்ற விழாவாக நமது தமிழர் மரபு இதை சிறப்பிக்கிறது. ஆம், இது ஒரு நன்றியின் விழா. கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, இயற்கையை நமக்கு சாதகமாக மாற்றித் தரும் எல்லாம் வல்ல கடவுளுக்கு நன்றி செலுத்துகின்ற விழா.

தமிழ் நாட்டில் பாசன நீருக்கு பாதகமான பல்வேறு சூழ்நிலைகள் இருந்தாலும், நமது மண்ணில் விவசாயத்தைக் காத்து வரும் உழவர்களுக்காக, அவர்களது தொழில் சிறக்க இன்றையத் திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம். உணவை விளைவிக்கும் உழவர்களின் வலியும் வேதனையும் தெரியாமல், பணம் மட்டுமே வாழ்க்கை என்று எண்ணி வாழ்வோர் அனைவரும் மனந்திரும்ப வரம் கேட்போம்.

சிறப்பாக, யூதர்களின் அறுவடை விழாவான பெந்தக்கோஸ்து நாளில் திருத்தூதர்கள்மீது இறங்கி வந்த தூய ஆவியார், தமிழக மக்களை கிறிஸ்துவின் ஒளியை நோக்கி அழைத்துச்செல்ல இன்று நம்மிடையே இறங்கி வருமாறு உருக்கமாக இத்திருப்பலியில் வேண்டுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

*(கீழுள்ள அந்தந்த மன்றாட்டுக்கு ஏற்றபடி படம் அல்லது பொருட்களுடன் பிள்ளைகள் வந்து முன்னால் நிற்பது நன்று)*

1. **சூரியன்:** படைப்பின் பரம்பொருளே இறைவா, ஒளியைத் தருவதற்கும், தாவரங்களின் வளர்ச்சிக்கும் நோய் கிருமிகளை அழிப்பதற்கும் நீர் படைத்த சூரியனுக்காக நன்றி கூறுகின்றோம். உமது சித்தத்தின்படி தன்னுடைய ஒளிகற்றைகளால் ஒளிதரும் சூரியனைப்போல நாங்கள் என்றும் உம் விருப்பத்தின்படி நடக்கவும், நாங்கள் பிறருக்கு உதவி செய்யும் தாராள உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. **கரும்பு:** அனைவரும் விரும்பி உண்ணும் இனிப்பும், சுவையும் நிறைந்த கரும்பினை படைத்த இறைவா உமக்கு நன்றி. இக்கரும்பின் தன்மையைப்போல நாங்களும் சாதி, மதம், இனம், ஏற்றத்தாழ்வுகள் பாராமல் அனைவரையும் ஒரே மனநிலைலோடு பார்க்கும் பரந்த மனதைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. **இஞ்சி, மஞ்சள்:** குணமளிக்கும் மருத்துவரே, மருத்துவ குணநலன்களும், உடல் ஆரோக்கியத்திற்கும், நல்ல காரியங்களுக்கும் முதன்மையாக பயன்படுத்தும் இஞ்சி, மஞ்சள் போன்றவற்றினால் பலவிதமான பலன்களைக் கொடுத்தமைக்கு நன்றி. மருத்துவமனையில் உள்ளவர்கள், தீராத வியாதியினால் துன்பப்படுபவர்கள் உமது குணமாக்கும் வல்லமையால் குணமாக்க வேண்டுமென்றும், நாங்களும் நோயுற்றவர்களிடம் குணமாக்கும் செயல்களாக கனிவோடும், ஆறுதலாகவும் நடந்துக்கொள்ளும் பொறுமையை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. **உழவு விவசாயிகள்:** நலன்களின் நாயகனே இறைவா, "உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகள்" என்ற சொற்களுக்கேற்ப தங்களுடைய நிலத்தில் கடினமாக உழைக்கக்கூடிய உழவர்களையும் விவசாயிகளையும் கொடுத்தமைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். எங்களுக்காக உழைக்கும் இவர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும், பொருளாதார வளர்ச்சியையும், வாழ்வில் முன்னேற்றத்தையும், அரசாங்கத்திலிருந்து இவர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகள், சலுகைகள் அனைத்தும் முழுமையாக கிடைக்கப்பெற்று தங்களின் வாழ்வில் உயர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. **கால்நடைகள்:** எங்களை காக்கின்ற தெய்வமே இறைவா, உம் படைப்புகளாகிய கால்நடைகளுக்காகவும் இவைகள் வழியாக நாங்கள் அடையும் பலவிதமான நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி. மனிதர்களாகிய நாங்கள் இக்கால்நடைகளிடம் அன்பும், இரக்கமும் காட்டி அவைகளை நன்முறையில் பேணி பாதுக்காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

6. **பொங்கல்:** அதிசயங்களை செய்கிற இறைவா, நன்றியின் நாளாக நீர் தந்த இந்நாளுக்காக நன்றி கூறுகிறோம். இந்நாளிலே நாங்கள் அனைவரும் மகிழ்ந்து உண்பதற்கு நீர் தந்த அரிசி, சர்க்கரை, வெல்லம், பருப்பு மற்றும் வாசனைப்பொருட்கள் அனைத்திற்கும் நன்றி கூறுகிறோம். இந்த உணவு பண்டங்கள் அனைத்தும் சேர்ந்து சுவையான "பொங்கல்" என்ற உணவை தருவதுபோல நாங்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒற்றுமையாகயிருந்து நல்லதொரு சமுதாயத்தையும், திருஅவையையும் உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## புனித வனத்து அந்தோணியார்

திருப்பலி
17.01.2026

### முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய நாளில் சிறப்பிக்கும் நம் புனித வனத்து அந்தோணியார், எகிப்தில் பிறந்த இவரே கிறிஸ்தவ துறவு வாழ்விற்கு வித்திட்டவர். உண்மையான தவமுனிவராக வாழ்ந்தவர். பெற்றோரை இழந்த நிலையில் 18 வயதில் தேவ அழைத்தலை உணர்ந்தவர் தனக்குரிய செல்வத்தை துறந்து இறை இயேசுவைப்பின் சென்றார்கள் என்ற சொற்களே (மத் 4:22). தனது சகோதரிக்கு மட்டும் ஒரு சிறுதொகையைக் கொடுத்துவிட்டு எஞ்சியதை ஏழையர்க்கு ஈந்தார். பின் துறவு வாழ்வு மேற்கொண்டு மறைநூலைப் படித்தல், கடுமையான உழைப்பு, செபம் ஆகியவற்றில் நாள்தோறும் நேரத்தைச் செலவிட்டார்.

நாளடைவில் தூய அத்தனாசியாரின் நண்பரானார். பலரும் இவரை அழைத்து ஆங்காங்கே குழுக்களாக துறவு வாழ்வு மேற்கொண்டனர். அவ்வப்போது இவர் அலெக்சாண்டிரியா நகருக்குச் சென்று சாவை எதிர்நோக்கி, வேதகலகத்தில் வாழ்ந்த, மறைசாட்சிகளை நம்பிக்கை சத்தியத்தில் உறுதிப்படுத்தினார். தூய அத்தனாசியார் இவரது துறவு வாழ்வைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இந்தக் குறிப்புகளின் பயனாகப் பலரும் பாலை நிலத்திற்கும், காடுகளுக்கும் சென்று வாழ்நாளெல்லாம் தவ, செப வாழ்வு வாழ்ந்து இறைவனடிச் சென்றனர்.

"இவ்வுலக வாழ்வு மின்னல் வேகத்தில் தோன்றி மறைகிறது. ஆனால் நிச்சயம் நிலையான பேரின்பம் என்பதும் எத்துணை மேலானது என்றும் தியானிப்பது நிறைய பலன் தருகிறது" என்று இவர் கொடுத்த மறையுரை புனித அகுஸ்தினாரை மிகவும் கவர்ந்திழுத்தது. இதை அகஸ்டின் தனது சரிதையில் குறிப்பிடுகிறார். புனித வனத்து அந்தோனியார் தமது 105வது வயதில் செங்கடலுக்கருகில் கி.பி. 356ம் ஆண்டு கொல்சீம் குன்றில் இறைவனடி சேர்ந்தார். இன்று நமது துறவு வாழ்வு இவரைப்போல் அமையும் உண்மையில் அனைத்தையும் துறப்போமா? இறை இயேசுவின்பின் செல்வோமா? அனைவரையும் அவர்பால் ஈர்த்து அழைத்து வருவோமா? மனதுருகி மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பே உருவான இறைவா, உம் திருப்பணிக்காக அழைத்த எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், பேராயர்கள், இருபால் துறவியர்கள் அனைவரும் புனித வனத்து அந்தோனியார் போல புனித வாழ்வு வாழ உம் அருளைப்பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆறுதலே இறைவா, இன்று எங்கள் குடும்பங்கள் இறைவார்த்தையில் ஊன்றாது, பின்பற்றாது, படிப்பதோடு மட்டும் என இயந்திர கதியில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். புனித வனத்து அந்தோனியாரைப் போல இறைவார்த்தையின்படி வாழ உம் ஆசீரை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, எங்கள் அனைத்து வாலிப இளைஞர்களையும், இளம் பெண்களையும் நீர் ஆசீர்வதியும். அவர்கள்தான் திருஅவைக்கும் சமூகத்திற்கும் நல்ல தூண்களாக திகழ வேண்டியவர்கள். ஆகவே அவர்கள் நல்ல ஞானத்திலும் அறிவிலும் சிறந்து விளங்க இறைவார்த்தை அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. ஈகை நிறைந்த இறைவா, வறுமை, ஏழ்மை, பற்றாக்குறை, தீவிரவாதம், வன்முறை, பகிராமனம், அனைத்தும் அன்புள்ளம் இல்லாதோரும், பகிராமல் இருப்போரும் தான். ஆகவே அனைவருக்கும் அன்புள்ளமும், பகிரும் தாராள உள்ளத்தையும் வழங்கி, உலகம், சமூகம் மக்கள் புதுப்பொலிவு பெற உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 2ம் ஞாயிறு

திருப்பலி
18.01.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

I. *எசா. 49: 2,5-6* II. *1கொரி. 1: 1-3* *யோவா. 1: 29-34*

இன்றைய தினம் நாம் பொதுக்காலம் 2ம் ஞாயிறு தினத்தை சிறப்பிக்கின்றோம். முதல்வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா, ஆண்டவர் தன்னிடம் உரைத்ததைப் பற்றி சான்று பகர்கின்றார். அதன்படி தாயின் கருப்பையிலேயே தன்னைத் தேர்ந்தெடுத்ததையும், யாக்கோபின் குலத்தை நிலைநிறுத்தி சிதறுண்ட இஸ்ரயேல் மக்களை கூட்டி சேர்க்கவும், தன்னை ஊழியனாக தேர்ந்தெடுத்தை சுட்டிக்காட்டுகின்றார். இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய மடலில், தானும் தன் சகோதரன் சொஸ்தேதும் இணைந்து கூறுவது இதுவே. கிறிஸ்துவால் தூயோராக்கப்பட்டு, இறைமக்களாக அழைக்கப்பட்ட யாவருக்கும் கிறிஸ்து வழங்கும் அருளும், அமைதியும் உரித்தாகுக என்கின்றனர். கிறிஸ்து நமக்கு மட்டுமல்ல அனைவருக்கும் ஆண்டவர் என்றும் கூறுகின்றனர். நற்செய்தியாளர்

யோவான் தன் நற்செய்தியில், இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற வந்தபோது அவரைநோக்கி, இவரே கடவுளின் செம்மறி என்றும், இவர் யாரென்று தெரியாதிருந்த எனக்குமுன்பே வந்தவர் என்றும், தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கப் பணித்திருந்த எனக்கு, தூய ஆவி யார்மீது இறங்குகிறதோ அவரே தூய ஆவியால் திருமுழுக்கு கொடுப்பவர் என்ற என்னிடம் ஏற்கெனவே கூறியிருந்தபடியாலும், இவரே இறைமகன் என சான்றும் பகர்ந்து வருகிறேன் என கூறியதாக அறிவிக்கிறார்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. மனுக்குலத்தின் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்த எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் தம்மைத் தாழ்த்தி, இறையேசுவின் மாட்சிமைகளை உலகிற்கு உணர்த்தி, அதை தங்களின் வாழ்வாக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உமது பிறப்பினால் எம்மை தூரோக்கிய எம் இறைவா, அகில உலகெங்கம் திருப்பலியாற்றிக் கொண்டிருக்கும் எம் அருட்தந்தையர்களை உம்கரம் சமர்ப்பிக்கின்றோம். உம் பிரசன்னத்தை எங்கம் எழுந்தேற்றம் செய்துக்கொண்டிருக்கும் அவர்களுக்கு நல்ல உடல்நலத்தையும், நோயற்ற வாழ்வும் மனஉறுதியும் தந்து காத்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாத்து வழிநடத்தும் இறைவா, இன்றைய நாட்டுத்தலைவர்கள் பொதுநலத்துடன் தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி, நேர்மையுடனும், பாதுகாப்புடனும் வழிநடத்தி, மக்களின் வறுமைநீக்கி வளம்பெற பல வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தி நலமுடன் வாழ உம்மை மன்றாடுகிறோம்.

4. நல்வழிப்படுத்தி நலம்தரும் இறைவா, எம் இளைய தலைமுறையினர், குழந்தைகள், முதியோர், உடல் நலிவுற்றோர், வாழ்விழந்து வாடுவோர், யாருமற்ற நிலையில் அவதியுறுவோர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம், நீர் இவர்களுக்கு உடல்வலிமையும், மனபலத்தையும் தந்து, இவர்களை வழிநடத்தும், பாதுகாக்க பரந்த உள்ளம் படைத்தவர்களை இனம்கண்டு தங்களின் வாழ்வை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# அருளாளர் லவுரா விகூனா

திருப்பலி
22.01.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

லவுரா கார்மென் விகூனா, சிலே நாட்டிலுள்ள சந்தியாகோ என்னுமிடத்தில் 1891ம் ஆண்டு பிறந்தார். லவுராவின் தாய் தன் இரு

பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்காகச் சொந்த ஊரை விட்டு அர்ஜென்டினாவிற்குக் குழந்தைகளுடன் சென்றார். 1900ம் ஆண்டில் சிறுமி லவுரா சலேசிய சபை கன்னியர்களால் நடத்தப்படும் பள்ளியில் சேர்ந்தாள். அதே ஆண்டில் முதல் முறையாக இயேசுவை தன் இதயத்தில் பெற்றபொழுது புனித தோமினிக் சாவியோவைப்போல் "இறைவனை என் முழு உள்ளத்தோடு அன்பு செய்வேன், ஒறுத்தல் முயற்சிகளைச் செய்வேன், கடவுளுக்கு எதிராக தீமை செய்வதைவிட சாவேன், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனங்களைப்பெற்று தேவ நற்கருணை உட்கொள்வேன்", என்னும் தீர்மானங்களை எடுத்துக்கொண்டாள்.

தன் தாய் நெறிதவறிச் செல்கிறார் என்பதை அறிந்த லவுரா, தன் தாயின் மனமாற்றத்திற்காக தன்னையே இறைவனுக்கு அர்ப்பணித்தாள். தன் ஆன்ம குருவின் ஆலோசனைப்படி தான் செய்த ஒறுத்தல் முயற்சிகளை அதிகரித்தாள். இதனால் அவள் உடல் வலுவிழந்தது. இறப்பதற்கு முந்திய நாள் தன் தாயை நோக்கி, "அம்மா உங்களை மீண்டும் கடவுளிடம் சேர்க்க விரும்பி என்னையே இயேசுவுக்கு அர்ப்பணித்து விட்டேன். நான் இறப்பதற்கு முன் நீங்கள் கடவுளோடு இணைந்து விட்டீர்கள் என்னும் மகிழ்ச்சியை எனக்குத் தாருங்கள்" என்றாள். 1904ம் ஆண்டு சனவரி 22ம் நாள் தன் தாய் மனம் மாறிய மகிழ்ச்சியோடு லவுரா உயிர் நீத்தாள். அர்ஜென்டினாவில், பாஹியா பிலாங்கா என்னுமிடத்தில் உள்ள சகாய அன்னையின் புதல்வியர் சபை சிற்றாலயத்தில் லவுராவின் உடல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால், லவுராவின் பனித்துளிப் போன்ற தூய்மை, அன்பு, தியாகம், தவற்றை எதிர்க்கும் மனத்துணிவு ஆகியவற்றைப் போற்றி 1988ம் ஆண்டு செப்டம்பர் 3ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். அருளாளர் லவுராவின் தூய விசுவாசத்தையும் விடா முயற்சியையும் நாமும் பெற்றுக்கொள்ள இறைவனிடம் இறைஞ்சுவோம், இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அகில உலக திருச்சபை, பறைசாற்றப்படும் மீட்பின் செய்தியை எடுத்துக்காட்டான கிறிஸ்துவ வாழ்வின் மூலமாகவும், கலாச்சார ஒருங்கிணைப்பின் மூலமாகவும் தாராள மனதுடனும் சுதந்திர மனப்பான்மையுடனும் வரவேற்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் தங்களது மறைப்பரப்புப் பணியிலே இளைஞர், இளம் பெண்களுக்கு கிறிஸ்துவ நம்பிக்கை, மகிழ்ச்சி, பிறரன்பு, சேவை, அறநெறி வாழ்வு ஆகியவற்றின் சிறந்த மதிப்பீடுகளை எடுத்துரைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியரும், சலேசிய குடும்பத்தினரும் புனித தோமினிக் சாவியோ, அருளாளர் லவுரா விகூஞா

இவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி தங்களின் தனி அழைப்பிற்கேற்ப உண்மையுள்ளவர்களாய் வாழ்ந்து புனிதத்தின் புதிய மாதிரிகளை திருச்சபையில் உருவாக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இளைஞர் இளம்பெண்கள் இறைவார்த்தையின் வலிமையினால் கிறிஸ்துவின் உயிர்தரும் பிரசன்னத்தில் நிலைத்திருந்து, தங்களையே சமுதாயத்திற்கு அர்ப்பணிப்பதன் மூலம் சுதந்திரம், நீதி, அமைதி, ஆகியவற்றைப் பெற்று அனுபவிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இங்கு கூடியுள்ள நாங்கள் புனிதமானதும் நற்கனி தருவதும் தியாகமானதுமாகிய திருத்துறவு வாழ்வை வாழ அழைக்கின்ற இறைத்தந்தையின் திருவுளத்திற்கேற்ப உண்மையுள்ளவர்களாக வாழ, இந்த நற்கருணைப் பகிர்வு வலிமையூட்ட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## புனித பிரான்சிஸ்கு சலேசியார்

**திருப்பலி**
**24.12.2026**

### முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவின் பிரியமான இறைமக்களே, இன்றைய தினம் நாம் தூய பிரான்சிஸ் சலேசியாரின் திருநாளைச் சிறப்பிக்க அழைக்கப்பட்டுள்ளோம். தூய பிரான்சிஸ் சலேசியார், பிரான்சிஸ் டி பாய்சி, பிரான் காய்ஸ் டி சாயனஸ் என்ற பெற்றோருக்கு பிரான்ஸ் நாட்டிலுள்ள தியோரென்ஸ் என்ற ஊரில் கி.பி. 1567ல் ஆகஸ்ட் 21ம் தேதியன்று பிறந்தார். குருப்பட்டம் பெற்று கி.பி. 1602 டிசம்பர் 8ந்தேதி ஜெனிவாவின் ஆயராக நியமனம் பெற்றார். மேன்மையான புனிதர் பத்திரிக்கையாளரின் புரவலர், நல்லொழுக்கத்தின் மாதிரி என்ற பல பட்டங்களுக்குரியவர். எல்லாவற்றுக்கும் மூலக்காரணமாக கடவுளின் அன்பை முக்கியமாக கருதியவர், பல சபைகளை உருவாக்கியவர். பதுவாவில் டாக்டரேட் பட்டம் பெற்றவர். பலரை மனந்திருப்பி, இறைவனிடம் சரியான முறையில் அன்பை செலுத்துவது எப்படி என்பதை விளக்கும் 12 புத்தகங்களை எழுதி புகழ் பெற்றவர். இறைவனோடு நெருக்கமான அன்பை வளர்த்துக்கொள்வது எப்படி என்றும், பிறர் மனதைத் தொடும்படியாகவும் தன் புத்தகங்களில் எழுதியுள்ளார். வாழ்க்கையின் மாற்றங்கள் குறித்து பயப்படுதல் தவறு, ஏனெனில் இறைவன் ஒவ்வொருவரையும் தன் கரங்களில் பொறித்துள்ளார் என்றும் உறுதியாக கூறியுள்ளார்.

இவரின் அரிய சேவையை பாராட்டி திருத்தந்தை 9ம் பத்திநாதர் இவருக்கு “டாக்டர் ஆப் சர்ச்ஸ்” என்ற கௌரப்பட்டத்தையும் கொடுத்துள்ளார். பின் கி.பி. 1622 டிசம்பர் 28ந்தேதி இறைவனடி சேர்ந்தார். இதற்கு பிறகு கி.பி. 1665ல் திருத்தந்தை 7ம் அலெக்சாண்டர் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார்.

இவரைப் பின்பற்றி நம்மையும் இறைவனிடம் நெருக்கமாய் இணைத்துக்கொள்ளும் மனப்பக்குவத்தையும், ஒருவரையொருவர் அன்பு செய்யும் ஞானமும் பெற இத்திருப்பலியில் பக்தியுடன் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நற்செய்தியின் நாயகனே இறைவா, திருஅவையின் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் பொதுநிலையினர் அனைவரும் நமக்கு முன்னோடியாக இருந்து தூய சலேசியாரின் வழியில் நடந்து நமக்குள் கடவுளின் அன்பை, மாட்சிமையை உருவாக்க பாடுபட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பை அபரிமிதமாக அள்ளித்தரும் இறைவா, இவ்வுலக வாழ்வில் தீயசக்திகளினால் ஏற்படும் அவல நிலைகளிலிருந்து மீட்படையவும், ஒருவரையொருவர் நேசிக்கும் உன்னத நிலையை உமது அன்பினால் மட்டுமே பெறமுடியும் என்னும் பேருண்மை எங்களில் உருவாக வேண்டுமென்று தூய பிரான்சிஸ் சலேசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. எல்லாம் வல்ல இறைவா, அச்சம் தரும் வகையில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் ஆட்சியாளர்களை உம் இறைப்பிரசன்னத்தால் மாற்றி நாட்டிற்கு தேவையான நல்ல திட்டங்களை கொண்டுவந்து மக்களை பாதுகாத்து அரவணைக்கும் நல்ல தலைவர்களாக மாறவும் சேவை செய்யும் மனப்பான்மை அவர்களிடையே வளரவும் அருள்புரியுமாறு தூய பிரான்சிஸ் சலேசியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 3ம் ஞாயிறு (இறைவாக்கு ஞாயிறு)

திருப்பலி
25.01.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *எசா. 9: 1-4* II. *1கொரி. 1: 10-13.17* *மத். 4: 12-23*

இறையேசுவில் பிரியமான இறைச்சமூகமே, பொதுக் காலத்தின் மூன்றாம் ஞாயிறுத் திருப்பலிக் கொண்டாடத்தில் பங்கேற்க வந்துள்ள இறைமக்களே உங்களை அன்புடன் மகிழ்வுடன் வரவேற்கிறோம். இறைசாயலில் படைக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்டப் பணிக்காக அழைக்கப்படுகிறோம். இயேசு தனது விருப்பங்களை இந்த மண்ணுலகில் மனித உறவுகளில் நிறைவுக் காணத் தனது சீடர்களை அழைக்கின்றார். மனமாற்றத்தைக் காணத்தான் இயேசு அழைக்கின்றார். உண்மை அழைத்தல் என்பது வெளிக்குறத் தோற்றத்தை வைத்துத் தீர்மானிப்பது அல்ல. மாறாக அடிப்படையில் மனநிலை மாற்றம் காண்பதேயாகும்.இதனையே இன்றைய வாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. வாழ்க்கை மாற மனமாற்றம் முதலில் தேவை என்பதை இயேசு வலியுறுத்துகின்றார்.

அன்புள்ளம் கொண்டு நம்மைக் கரம் பிடித்து அழைத்த இயேசு கிறிஸ்து நம்முடன் கடைசி வரை இருக்கின்றார். இறைவனில் அழைத்தல் இல்லறமோ துறவறமோ எதுவாக இருந்தாலும் அதில் நிலைத்து நின்று வாழத் தேவையான வரங்களை இத்திருப்பலி வழியாக இறைவனிடம் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே எம் இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவியர், உம் திருஅவை கிறிஸ்துவின் விலைமதிக்கமுடியாத மதிப்பீடுகளான உண்மை, அன்பு, நீதி, சமத்துவம் ஆகிய நற்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உலக மக்கள் அனைவரின் நல்வாழ்வு மலர்ந்திட இறைமனித உறவு ஒன்றுப்பட்ட வாழத் தேவையான ஞானத்தை நிறைவாகப் பொழிந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. துன்புறுவோரின் துணையாளரே எம் இறைவா, உலகில் நிலவும் ஏழ்மை, வறுமை, இல்லாமை என்ற நிலைகள் மாறி இருப்பவர்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப, சேமித்து எழைகளோடு பகிர்ந்து உண்மையான ஆதிதிருஅவைக் கொண்டு வந்த அர்த்தமுள்ள, கிறிஸ்தவ வாழ்வு வாழத் தேவையான அருளைப் பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிபாட்டின் நாயகரே எம் இறைவா, இன்றைய சூழலில் வழிபாடுகள் பெறும் வெற்றுச் சடங்குளாக அல்லாமல் பொருளுள்ள வழிபாட்டின் முழுநிறைவையும், முழுமையாகப் பெற்றுத் திருமுழுக்கு யோவானைப் போல் சாட்சிய வாழ்வு வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. எம்மை அரவணைக்கும் எம் இறைவா, இளையோர்கள் தாங்கள் விரும்பிய வாழ்வைத் தங்கள் விருப்பம்போல் வாழாமல் கிறிஸ்து இயேசுவை அடிக்கல்லாகவும், மூலைக்கல்லாகவும் கொண்டு புதிய ஆற்றலோடு பணிவாழ்வே தங்களின் வாழ்வின் நிலையான வாழ்வு என்பதை உணர்ந்து வாழ்ந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# இந்திய குடியரசு நாள்

திருப்பலி
26.01.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதரிகளே, சகோதரர்களே, இன்று நாம் அனைவரும் திருஅவையாக இணைந்து நம் நாட்டின் குடியரசு நாளைக்கொண்டாடி மகிழ அழைக்கப்பட்டிருக்கிறோம். 1950ம் ஆண்டு ஜனவரி 26ம் நாள் புதிய அரசவையில் அமைப்புச் சட்டங்களுடன் இந்தியா தன்னை ஒரு குடியரசு நாடாக அறிவித்தது. உலகிலேயே மிகப்பெரிய

ஜனநாயக நாடு என்னும் பெருமை நம் இந்திய நாட்டுக்கே உண்டு. ஏறத்தாழ 350ஆண்டுகள் அந்நிய ஆட்சியில் கட்டுண்டு கிடந்த நாடு, ஜனநாயகத்திற்கும், குடியாட்சித்துவத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

இன்று இந்தியா பெற்றுள்ள வளர்ச்சி எல்லாத் தரப்பினரும் மகிழக்கூடிய அளவில் இல்லாமல் வசதி படைத்த மக்களின் வளர்ச்சியாகவே விளங்குகிறது. இந்த நிலை மாற இறைவனிடம் மன்றாடுவோம். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (நீமொ.1:7) என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து "தெய்வ பயம்" உள்ளவர்களாக வாழ மன்றாடுவோம்.

இன்றைய நற்செய்தியில் "உண்மை உங்களுக்கு விடுதலை" அளிக்கும் (யோவான் 8: 32) என்று இயேசு கூறுகிறார். பிறரை அன்பு செய்வதில்தான் உண்மையான விடுதலை கிடைக்கும். இந்த விடுதலையை அளிப்பவர் இறைவன் ஒருவரே. ஆதலினால் உண்மைச் சுதந்திரத்திற்காக இறைவனிடம் மன்றாடுவோம். வேற்றுமை அகற்றி, ஒற்றுமை, ஒருமைப்பாட்டை வளர்க்கும் கொடைகள் அனைத்தும் நம் நாட்டுத்தலைவர்களுக்கு இறைவன் தர இந்த குடியரசு நாள் திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. விண்ணுலக அரசரே எம் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் உம் அன்புக்கட்டளையின்படி ஒருவரையொருவர் அன்பு செய்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த இறைவா, இன்று எம் தாய்திருநாடு குடியரசு தினவிழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இன்றைய நாளில் எம்மை ஆட்சிசெய்யும் எம் தலைவர்கள் "தெய்வ பக்தி" உள்ளவர்களாகவும், பிறரன்புப்பணி செய்யும் தலைவர்களாகவும் மாற உம் அருளை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. சுகம் தரும் இறைவா, உடல் நலமின்றி வாழும் சகோதர சகோதரிகள் உம் வருகையால் நலமும் வளமும் பெற்று மனநிறைவும் மகிழ்ச்சியும் பெற்று வாழ்ந்திடத் தேவையான அருளைத்தந்திட உம்மை மன்றாடுகிறோம்.

4. விடுதலையின் நாயகரே எம் இறைவா, இன்றைய நாளில் நோயினாலும், கடன் தொல்லையினாலும், குடும்பங்களில் பிரச்சனைகளாலும் தவித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் தேவைகளையும் பிரச்சனைகளையும் களைந்து வாழ்வில் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கும் ஆற்றலைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

# புனித திமொத்தேயு, தீத்து

திருப்பலி
26.01.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இறையேசுவில் பிரியமான இனிய மக்களே, இன்று நம் திருஅவை புனித திமொத்தேயு, தீத்து இவர்களின் நினைவு நாளைச் சிறப்பிக்கின்றது. முதலில் நாம் புனிதர் திமொத்தேயுவைப்பற்றி அறிந்துக்கொள்வோம். லிஸ்திரா நகரின் கிறிஸ்தவ விசுவாசியான யூதகுல பெண்மணி யூனீஸ் என்பவருக்கும், கிரேக்க தந்தைக்கும் பிறந்தவர் புனித திமொத்தேயு. லிஸ்திரா நகரில் புனித சின்னப்பர் போதித்து கொண்டிருந்தபோது அவரோடு இணைந்தவர் தூய ஆவியாரின்மீது மிகவும் பற்றும் உறுதியும் கொண்டவர். தொடக்க கால கிறிஸ்தவர்களிடையே நற்செய்தி பணியாளராக பணி செய்தபோது புனித சின்னப்பரால் எபேசியஸ் நகர ஆயராக நியமிக்கப்பட்டார்.

"திமொத்தேயு" என்கிற பெயருக்கு "கடவுளின் மாட்சிமை" என்பது பொருள். வயிறு, குடல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு பாதுகாவலராக இருப்பவர். புனித சின்னப்பரின் 2வது பயணத்தின்போது சீலாவுடன் இருந்தவர். கி.பி. 97ல் வேத கலாபனையின்போது கல்லெறியப்பட்டு வீதிகளில் இழுத்தடிக்கப்பட்டு வேதசாட்சியாக மரித்தவர்.

**புனித தீத்து:** "கிரீஸ்" நகரில் "கிரீட்" என்னும் ஊரில் கி.பி. 13ம் ஆண்டு பிறந்தவர். "கிரீட்" நகரின் பாதுகாவலர் என பெயர் பெற்றவர். புனித சின்னப்பர் இவரைப்பற்றிக் கூறும்போது "எனது உண்மையான குழந்தை, நம்முடைய பாரம்பரிய நம்பிக்கை என்பார். புனித சின்னப்பரின் தோழரும், சீடருமாக இருந்தவர். புனித சின்னப்பரின் திருமுகங்களில் பல இடங்களில் இடம் பெற்றவர். புற இனத்தவரான புனித தீத்துவை புனித சின்னப்பர் "கிரீட்" நகரின் ஆயராக்கினார். பின் இவரை கொரிந்து நகருக்கு அனுப்பி அங்குள்ள திருஅவையை சீர்த்திருத்தும்படி கூறினார். அந்த வேலை வெற்றிகரமாக செய்து முடித்தார் புனித தீத்து. பின் ஒருவித காய்ச்சலில் உயிர் நீத்தார். திருஅவைக்காக பல காலம் பணி செய்த இவர்களைப்போல நாமும் விசுவாசமுடன் திருஅவையை காப்போம் என சிந்தனையோடு திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நற்செய்தியின் நாயகனே இறைவா, எங்கள் திருஅவையின் தலைவர் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் யாவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை உணர்ந்து, தெளிந்து பிறருக்கு அறிவிக்கும் பணியில் முழுமையாக நிலைக்கும் வரத்தை அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் ஊற்றே இறைவா, அரசியல் மோகம், ஜாதி, மதவெறி, பொருளாசை என்று தலைவர்கள் அலைந்து திரியாமல் மனிதநேயம், பிறரன்பு என்ற உமது மதிப்பீடுகளை மனதில்கொண்டு மக்கள் பணிபுரிய நல்மனதினை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் நங்கூரமே இறைவா, குடும்பங்களில் ஏற்படும் இடர்பாடுகள், பிரச்சினைகள், கருத்து வேற்றுமைகள் இவைகளால் வரும் மனப்போராட்டங்களால் உம்மை மறந்து விடும் நிலையை மாற்றி நம்பிக்கையின் பற்றுறுதி உம்மில் நிலைத்திருக்க வரமருள புனித திமொத்தேயு, புனித தீத்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.



## அருளாளர் பொரோனிஸ்லாவ் மார்க்குவிச்

திருப்பலி
30.01.2026

### முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

ஜனவரி 30.01.2024 இன்று அருளாளர் பொரொனிஸ்லாவ் மார்க்குவிச் என்பவரின் நினைவை திருப்பலியில் இணைந்து தியானித்து சிறப்பு செய்ய கூடியுள்ளோம். மனிதராய் பிறப்பதே மாதவம் என்பர். அப்படி பிறந்தாலும் எதற்காக ஏன் பிறந்தோம் என ஆய்விற்கு உட்படுத்தி எனது வாழ்வு அர்த்தமற்றதாக செயலற்றதாக இருக்கக் கூடாது என எண்ணி ஓர் இலக்கு நோக்கி பயணித்து பயனுள்ளதாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் பயணிப்பவர்கள் ஒரு சிலரே. அப்படி தன்னை அர்ப்பணித்து செயலாக்கம் செய்து வாழ்ந்து அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர் இன்றைய புனிதர்.1842 ல் ஜூலை 13 ம் நாள் போலந்து நாட்டில் பிறந்தார். இளம் வயதிலேயே இறைப் பணிக்காக 1857 செப்டம்பர் 15ம் நாள் அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். பிரிஸ்மைசில் என்ற ஊரின் மறை மாவட்டத்தில் பதினெட்டு ஆண்டுகள் மிகுந்த ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் தனது குருத்துவ பணியை செவ்வனே செய்தார்.

பின் சலேசிய சபையில் சேர்ந்தார்.சபையின் தலைவராக இருந்த புனித ஜான் போஸ்கோவுடன் இணைந்து பணி புரிந்தார். 1897 ல் குருவானவர்களுக்கும் கன்னியர்களுக்கும் மிக்கேல் எனும் சபையை நிறுவினார்.இறையன்பாலும் பிறரன்பாலும் உந்தப்பட்டு இவர் பணி புரியும்போது மிகுந்த தன்னடக்கத்துடன் இருப்பதில் கவனம் செலுத்தினார்.இவர் தனது வாழ்க்கையை கைவிடப்பட்டவர்கள் அனாதைகள் ஒதுக்கப்பட்டவர்கள் வாழ்க்கையில் நெறி தவறிய இளைஞர்கள் போன்றோர்களுக்காக தன்னை அர்ப்பணித்து அவர்கள் வாழ்வு மேம்பட சிறந்து விளங்க உழைத்தார்.

இறுதியில் 1912 சனவரி 29 ம் நாளில் இறைவனோடு இணைந்தார்.இவரின் சிறப்புக்களை பார்த்த திருத்தந்தை பதினாறாம்

பெனடிக்ட் அவர்கள் ஜுன் 19 2005ல் அருளாளர் பட்டம் வழங்கி இவரை கௌரவித்தார். ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம் என்றில்லாமல் இப்புத்தாண்டில் இப்புனிதரை தியானிக்கின்ற இத்திருநாளில் இறைஇயேசுவின் இலக்கு நோக்கி பயணித்து இறையாட்சி மலர சபதம் ஏற்று இணைந்து செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா இப் புத்தாண்டு முழுதும் புதுமை மணம் மணக்க வேண்டும் எம் திரு அவை அருட் பணியாளர்கள் அணைவரும் இன்று கொண்டாடும் இப் புனிதரை போன்று செயலாக்கத்தில் மிகுந்த கவனம் செலுத்தி இறைப் பணி வாழ்வின் மேன்மையை அறிந்து உணர்ந்து செயல்பட ஆவியின் வல்லமையால் நிரப்பிட உம்மை மன்றாடுகிறோம்

2. அன்பை பொழியவே உருவெடுத்த இறைவா உலக மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வு இன்றி இறையன்பிலும் பிறரன்பிலும் சிறந்து அதற்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. மனம் மாறுங்கள் என உரைத்த இறைவா, சமய சாதி இன மொழி நாடு எனப் பாராமல் எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக என்ற உமது வாக்கு நிறைவேற பண்பாடு கலாச்சாரம் என்ற பெயரில் மனிதத்திற்கு எதிராக திணிக்கப்படும் அனைத்தும் களையப்பட்டு ஒரு மனத்தோராக இணைந்து வாழும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.



# புனித ஜான் போஸ்கோ விழா

திருப்பலி
31.01.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, மானுட வாழ்வின் மகத்தான விடியலுக்கு விடிவெள்ளியாகத் தேர்ந்துகொள்ளப்பட்ட பலரில் குறிப்பாக நம் அசாத்தியமான விந்தைமிகு குருவானவர் புனித ஜான் போஸ்கோ என்றால் அது மிகையாகாது. இன்று திருஅவையோடு சேர்ந்து நாம் அவருடைய விழாவினை கொண்டாட வந்துள்ளோம். நல்லாயனாம் இறை இயேசுவின் நற்செய்தியை அறிந்து, ஆன்மீகப் பணியின் வழியாகவும், கல்விப் பணியின் வழியாகவும் திருஅவையின் வளர்ச்சிக்கு குறிப்பாக ஏழை எளிய ஆதரவற்ற இளையோரின் வளர்ச்சிக்கு துணை நின்றவர் புனித ஜான் போஸ்கோ. அன்பு, அறிவு, இறைவன் என்னும் முப்பெரும் ஆற்றலை மையமாகக் கொண்டு இளையோரை உருவாக்கும் உன்னதப் பணிக்கு தன்னையே அர்ப்பணித்து, அர்ப்பண வாழ்வு வாழ்ந்தவர். இவர் பரப்பிய முப்பெரும் பக்திகளான நற்கருணை, அன்னை மரியாள் மற்றும் திருத்தந்தை ஆகியவற்றின் மூலம் திருஅவையின் மீது தனக்கிருந்த ஈடுபாட்டையும் ஆர்வத்தையும்

வெளிப்படுத்தியதாக அமைந்தது. புனித ஜான் போஸ்கோ கடவுளின் விருப்பத்தை மனத்தில் கொண்டு கடவுளோடு ஒன்றித்து வாழ்ந்து மற்றவரையும் வாழ்வித்தார் என்ற உண்மையை அவரது வாழ்வு நமக்கு பறைச்சாற்றுகிறது. இளையோரின் நண்பர், அனாதைகளின் தந்தை என்றெல்லாம் அழைக்கப்படும் இவரது வாழ்வு மலர்ப்படுக்கையினால் நிறைந்தது அல்ல மாறாக முட்களும் வேதனைகளும் தடைகளும் நிறைந்தவை. இவற்றை தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டவர் அதன் காரணத்தையும் நமக்கு தெளிவுபடுத்துகிறார். அதாவது அவர் ஆன்மாக்கள் மீது வைத்திருந்த தாகமும், கடவுள் மீது வைத்திருந்த அளவு கடந்த அன்பும்தான். "ஆன்மாக்களை கொடுங்கள், வேறெதுவும் வேண்டாம்" என்ற வாசகத்தை தனதாக்கிக்கொண்டு கடவுளோடு இணைந்த வாழ்வு வாழ்பவர்களின் உள்ளத்தில் கடவுளே வாழ்கிறார் என்ற கூற்றுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார். எனவே இப்புனிதரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி கிறிஸ்துவ மதிப்பீடுகளை உள்வாங்கி நாமும் நம்மை மாற்றிக்கொண்டு இளையோர் தம் வாழ்வில் ஏற்றம்பெற உழைப்போம். இதன வழியாக தனிமனிதர்களும் சமுதாயமும் வளம்பெற துணை நிற்போம் என்னும் உறுதியோடு தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம் நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நன்மையே உருவான இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் குறிப்பாக சலேசிய துறவிகள் அனைவரும் தங்களுடைய அழைப்பிற்கேற்ப சான்று பகர்ந்து, நற்செய்தியை மகிழ்ச்சியுடனும், தாராள உள்ளத்துடனும் எடுத்துரைக்கத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு நிறைந்த இறைவா, உலக மக்கள் அனைவரும் சமுதாயத்தின் மேன்மைக்காக குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்காக, தன்னலமற்ற தாராள உள்ளத்தோடு பணியாற்றிட வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.

3. அனைத்தையும் ஆதரித்தாளும் இறைவா, சலேசியர்கள் மற்றும் சகாய அன்னையின் புதல்வியர்கள் மற்றும் சலேசிய குடும்பத்தினர் யாவரும் தங்கள் அழைப்பிற்கேற்ப இளையோருக்காக சேவை செய்யவும், அவர்களை புனித ஜான் போஸ்கோ வழியில் உருவாக்கவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நலமெல்லாம் நல்கிடும் இறைவா, இளையோரின் பணியில் ஈடுபட்டுள்ளோர் தங்களுடைய பாதுகாவலர் புனித தொன் போஸ்கோவின் வழியில் தம் திருத்தூதுவ வாழ்வில் ஆர்வமுடன் செயலாற்றும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# புனித பிரான்சிஸ்கு சலேசியார்
## வாழ்வும் பாடமும்

*திரு. I. ஜான் சுரேஷ்*

இயல்பிலேயே பொறுமைசாலியான பிரான்சிஸ் சலேசியார் பிரான்ஸ் நாட்டில் 1567 ஆகஸ்ட் 21 அன்று பிறந்தார். பிரான்சிஸ் தே பாய்சி மற்றும் பிரான்சிஸ் தே சியோனாஸ் ஆகியோருக்கு 13 பிள்ளைகளுள் மூத்த மகன் இவர். 13 ஆண்டுகள் தனக்கு குருவாக பணியாற்ற அழைப்பு இருப்பதை யாருக்கும் தெரிவிக்காமல் இருந்தார். போர் வீரனாக வேண்டும் என்று இவரது தந்தை கூறியபோது அதற்கும் மறுப்பேதும் கூறவில்லை. சட்டம் படித்தபோதும் சரி, இறையியல் கற்றபோதும், வாள் சண்டையில் முன்னேறிய போதும் தனது தனிப்பட்ட செப வாழ்வில் வளர்ச்சி கண்டாரேயன்றி தந்தையிடம் ஏதும் கூறவில்லை. ஏனென்றால் தமது விருப்பம் என்பதைவிட எப்போது அழைத்தலை நான் ஏற்க வேண்டும் என்று கடவுள் விரும்புகிறாரோ அப்பொழுதுதான் செல்ல வேண்டும் என்று நினைத்திருந்தார்.

குதிரை ஓட்டுவதில் தேர்ச்சி பெற்றிருந்த பிரான்சிஸ் மூன்று முறை கீழே விழுந்தார். அப்போது தனது வாளும் அது இருந்த உறையும் தரையில் விழுந்தபோது சிலுவை அடையாளமாகவே ஒவ்வொருமுறையும் கிடந்தது. இதை இறைவனின் அடையாளமாக கருதி தந்தையிடம் தனது விருப்பத்தை கூறினார். ஆன்மீகத்தில் இவர் கொண்டிருந்த வளர்ச்சியை கண்ட ஆயர் "இவர் உண்மையிலேயே இறையனுபவம் கொண்டவர்" என்று கூறி குருவாகத் திருநிலைப்படுத்தினார். "குருத்துவ மாண்பே மற்ற உலகப் பதவிகளைவிட மேன்மையானது" என்று பிரான்சிஸ் தெளிந்த பார்வையுடன் பணியைத் தொடங்கினார். கால்வின் சபையினர் கிறிஸ்தவர்களைத் தம்

வசமாக்கியிருந்த சூழலில் கிறிஸ்தவர்களை மீண்டும் கத்தோலிக்க சபைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்தார். ஆனால் அதில் எந்த ஒரு பயனும் ஏற்படவில்லை. ஒரு முன்னேற்றமும் ஏற்படாததால் தமது மறையுரையை தாளில் எழுதி கையாலே பல பிரதிகள் எடுத்து ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் போட்டார். மாற்றம் இல்லை. இவரது முயற்சியால் 40,000 பேர் கத்தோலிக்க மதத்திற்கு திரும்பி வந்தார்கள்.

“மிக மோசமான பாவம் என்பது மற்றவர்களைத் தீர்ப்பிடுவதும், புரணிபேசுவதும்” என்று, பிரான்சிஸ் தினந்தோறும் 50க்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி அதன் வாயிலாக பலரை நெறிப்படுத்தினார். “புனிதம் என்பது துறவிகளுக்குத்தான் என்றிருந்த நிலையை மாற்றி சாமானியர்களுக்கும் அர் உரியது” என்பதை தமது “புனித வாழ்விற்கான முன்னுரை” என்னும் நூலில் 1608ல் அழுத்தமாக பதிவு செய்தார்.

“உமது பார்வையை தியானத்தின் வழியாக கடவுள் பக்கம் திருப்பினால் உன் முழு ஆன்மாவிலும் கடவுள் நிறைந்திருப்பார். அனைத்து செயல்பாடுகளையும் கடவுள் பிரசன்னத்திலிருந்தே ஆரம்பி என்று மொழிந்த பிரான்சிஸ் தனது அருகிலிருந்த அருட்சகோதரியிடம் “தாழ்ச்சி” என்னும் வார்த்தையை கடைசியாக சொல்லிவிட்டு 1622 டிசம்பர் 28 அன்று உயிர் நீத்தார். 08.01.1661ல் அருளாளர் நிலைக்கும், 08.04.1665-ல் அன்று புனித நிலைக்கு திருத்தந்தை ஏழாம் அலெக்சாண்டர் உயர்த்தினார். 1877 நவம்பர் 16 அன்று மறைவல்லுநர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

### புனித பிரான்சிஸ்கு சலேசியார் பற்றி தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்பது விஷயங்கள்



1. புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் தனது 24 வயதில் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்றார். பின்னர், தனது தந்தையின் தயக்கத்தையும் மீறி, பிரான்சிஸ் டி சேல்ஸ் குருத்துவப் பணியில் சேர்ந்தார்.

2. அவர் புராட்டஸ்டன்ட் சீர்திருத்தக் காலத்தில் வாழ்ந்தார் மற்றும் கால்வினிஸ்டுகளை கத்தோலிக்க திருச்சபைக்குத் திரும்பக் கொண்டுவர பாடுபட்டார். அவர் தனது 35 வயதில் ஜெனீவாவின் ஆயரானார்.

3. புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் கத்தோலிக்க பத்திரிகைகளின் பாதுகாவலர் புனிதராகக் கருதப்படுகிறார். ஏனெனில், விசுவாசத்தை விட்டு விலகிய கத்தோலிக்கர்களிடையே விசுவாசத்தைப் பரப்புவதற்காக எழுத்துப்பூர்வத் தொடர்பைப் பயன்படுத்திய முதல் நபர்களில் இவரும் ஒருவர். இந்த அணுகுமுறை பெரும் வெற்றி பெற்றது.

4. அவர் தனது பொறுமையான மற்றும் மென்மையான இயல்புக்காக அறியப்பட்டார்.

5. புனித ஜேன் பிரான்சிஸ் டி சாண்டலின் உதவியுடன், அவர் “ஆசீர்வதிக்கப்பட்ட கன்னியின் சந்திப்பு சபை“யை நிறுவினார்.

6. அவர் வாழ்ந்த காலத்தில், புனிதத்தன்மை என்பது துறவற வாழ்க்கைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே உரியது என்று பலர் நினைத்தனர். இருப்பினும், புனித பிரான்சிஸ் டி சேல்ஸ், பொதுநிலைப் பெண்கள் மற்றும் ஆண்கள் உட்பட அனைவரும் புனிதத்தன்மைக்கு அழைக்கப்பட்டவர்கள் என்ற உண்மையை பரப்ப பாடுபட்டார்.

7. புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் பலருக்கு கடிதங்கள் மூலம் ஆன்மீக வழிகாட்டுதலை வழங்கினார்.

8. அவரது ”பக்திமயமான வாழ்க்கைக்கு ஒரு அறிமுகம்” என்ற புத்தகம், புனிதத்துவப் பாதையில் விசுவாசிகளைத் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது. புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் இன்றும் பொருத்தமான பல ஞான வார்த்தைகளை வழங்கியுள்ளார்.

9. அவர் 1877-ல் திருச்சபையின் மறைவல்லுநர் என்று அறிவிக்கப்பட்டார்.



# புனித தொன் போஸ்கோவின் வாழ்வில் மரியன்னை

*திரு. ஜான் அலெக்ஸ்*

புனித தொன் போஸ்கோ செய்த ஒவ்வொரு செயலையும் "அருள்நிறைந்த மரியே" என்ற செபத்தைச் சொல்லிவிட்டுதான் செய்வார். அவர் மரியாளின் மீது கொண்ட பக்தி அளவிடமுடியாதது. அன்னை மரியாளின் பரிந்துரை வழியாக அவர் வாழ்வில் நிகழ்ந்த புதுமைகள் எண்ணிலடங்கா. தன் ஒன்பது வயது கனவு முதல் பல உதாரணங்களை சொல்லிக் கொண்டே போகலாம். குறிப்பாக அந்த ஒன்பது வயது கனவில் மரியன்னையின் துணை வழியாக எதிர்காலத்தில் அவர் ஆற்றவிருக்கும் இளையோர் பணியைக் குறித்து காட்டுவதை நாம் உணரலாம்.

தூய தொன் போஸ்கோ மரியன்னையின் பக்தியில் வளர்வதற்கு முழு காரணமாக விளங்கியவர் அவரது தாய் மம்மா மார்கரெட். சிறுவனாக இருந்த ஜானை கஸ்தல்நுவோவில் விடுவதற்கு முன் "ஒரு போதும் தேவத்தாயின் பக்தியை மறக்காதே" என்று மம்மா மார்கரெட் கூறினார். இதை தொன் போஸ்கோ தன் ஆழ்மனதில் பதித்தவராய் மட்டுமல்ல பின்னாலில் வளர்ந்து குருமடத்தில் சேர வேண்டிய நாளிலும் தன் தாய் அவரிடம் சொன்னது "நீ இவ்வுலகில் பிறந்ததும் உன்னை நான் தேவ அன்னைக்கு ஒப்புக்கொடுத்தேன். பின்னர் உன்னையும் அன்னையின் மீது பக்தியாய்

இருக்கும்படிச் சொன்னேன். இப்போது நீ உன்னை முழுவதும் அந்த தாய்க்கு ஒப்புக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். நீ குருப்பட்டம் பெற்றால் உன் உயிருள்ளவரை அத்தாயின் பெருமையை எங்கும் பரப்பிட மறவாதே" என்பதே.

சலேசிய சபையைக் கட்டி எழுப்ப உறுதுணையாகவும், சபையின் வளர்ச்சியில் அச்சாணியாகவும் இருந்ததும் அன்னை மரியாள் மற்றும் அருள்நிறைந்த மரியே என்ற சிறு செபம் மட்டுமே என்று தொன் போஸ்கோ பலமுறை சொல்லியிருக்கிறார். மரியன்னையின் மீதுள்ள பாசத்தினாலும் அன்பினாலும் தொன் போஸ்கோ, கிறிஸ்தவர்களின் சகாய அன்னையாகவும் சலேசிய சபையை சகாயத்தாய்தான் வழிநடத்துகிறார் என்று அடிக்கடி நினைவுறுத்துவார். சபையின் தொடக்கத்தில் பல தோல்விகள் இருந்தாலும் சகாய அன்னையின் ஆசீர் என்றும் இருந்ததை அவர் உணர்ந்தார். தொன் போஸ்கோவின் வாழ்வில் அந்த சகாய அன்னையின் வழிகாட்டுதலில் பல இளைஞர்களை மரியன்னையின் பாதத்தில் சேர்த்தது. இளையோர் மன்றங்களில் மாணவர்கள் மரியன்னை பாடல்கள் பாடும்போதெல்லாம் தானும் அவர்களோடு மகிழ்ந்து பாடுவார். மரியன்னையின் பக்தியில் தன்னை ஒருமித்து அதன்வழி பல மாணவர்களைக் கவர்ந்தவர் நம் தொன் போஸ்கோ.

மரியன்னை தொன் போஸ்கோவின் வாழ்வில் செய்த மிகப்பெரிய புதுமை என்று சொன்னால் அது மரியன்னைக்காக கிறிஸ்துவர்களின் சகாய அன்னையின் பெயரில் கட்டியெழுப்பிய மாபெரும் பேராலயத்தை நாம் சொல்லலாம். பல எதிர்ப்புகள் வந்தது, அரசாங்க அனுமதி மறுக்கப்பட்டது என்றாலும் அப்போதைய திருத்தந்தை 9ம் பத்திநாதரின் அங்கீகாரம் மற்றும் அவரின் முதல் நன்கொடையான ரூ.500 மட்டுமே மூலதனமாக கொண்டு கையில் வேறு பணமில்லாமல் அப்பேராலயம் கட்டும் பணியை ஆரம்பித்த தொன் போஸ்கோவிற்கு பணம் தேவைப்பட்ட போதெல்லாம் சகாய அன்னை மூலமாக வியப்பிற்குரிய வகையில் கிடைக்க ஆரம்பித்தது. அவர் முழுநம்பிக்கையோடு "சகாய அன்னை தாமே தமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டிக்கொண்டாள்" என்று கூறுவார்.

அது மட்டுமல்ல, மோட்ச இராக்கினி மாதா திருவிழாவிற்கு ஆயத்தமாக மூன்று நாள் மறையுரை ஆற்ற தொன் போஸ்கோ அழைக்கப்பட்டிருந்தார். அவ்வூரில் மூன்று மாதகாலமாக மழையின்றி பயிர்கள் அனைத்தும் வாடிப்போயின. எத்தனையோ பக்தி முயற்சிகள், செப வழிபாடுகள் நடத்தப்பட்டும் பயனில்லை. முதல் மறையுரையில் தொன் போஸ்கோ மக்களிடம், "இந்த மூன்று நாள் நீங்கள் மறையுரையைக் கேட்டு கடைசி நாளில் நல்லதொரு ஒப்புரவு அருட்சாதனம் பெற்று நற்கருணையை உட்கொண்டால் சகாய அன்னையின் அருளால் நிச்சயம் மழை பெய்யும் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்" என்று கூறினார். இவ்வாறு கூறிய தொன் போஸ்கோவிற்கே தெரியவில்லை அவர் எப்படி அவ்வாறு சொன்னார் என்று. அவருடைய மறையுரையை கேட்ட மக்களும் நம்பிக்கையோடு இறை இயேசுவைப் பக்தியுடன் உட்கொண்டனர். திருவிழா நாள் அது.

எப்போதும்போல் சூரியன் சுட்டெறித்தான். மழை மேகங்களின் வருகைக்கான அறிகுறியும் இல்லை. மாலை நேரமும் வந்தது. தொன் போஸ்கோ சகாய அன்னையின் மீதுள்ள நம்பிக்கையில் அன்றைய கடைசி நாள் மறையுரையை தொடங்கினார். எல்லோரும் ஆவலோடு மழையை எதிர்நோக்கி காத்திருக்க, நேரம் ஆக ஆக தொன் போஸ்கோவின் முகத்தையே பார்த்திருந்தனர். சிறுதுநேரத்திற்குள் வானம் இருண்டு இடியும் மின்னலும் உண்டாகி, கனமழை பெய்தது. மரியன்னை அற்புதமாய் எவ்வாறு அற்புதங்களை தன் வாழ்வில் செய்துவருகிறாள் என்று சொல்லி கண்ணீரோடு அந்த சகாயத்தாயைப் போற்றினார்.

தொன் போஸ்கோ சலேசிய குடும்பத்திற்கு மட்டுமல்ல நம் அனைவருக்கும் மரியன்னையைத் தாயாகவும், பாதுகாவலியாகவும், புதுமைகள் நிகழ்த்துபவளாகவும், துன்ப வேளைகளில் ஆறுதல் அளிப்பவளாகவும் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுபவளாகவும் கொடுத்துள்ளார் என்பதில் மாற்றுகருத்து கிடையாது. மரியன்னை தொன் போஸ்கோவின் வாழ்வில் எவ்வாறு புதுமைகள் செய்தாரோ அதே போன்று நமது வாழ்விலும் செய்ய காத்திருக்கிறாள் என்பதை மறந்துவிடக்கூடாது.

”மரியன்னையின் மீது நம்பிக்கை வைப்போம்,
அற்புதங்களை காண்போம்” ... தொன் போஸ்கோ





# புனித தேவசகாயம் பிள்ளை

## வாழ்வு தரும் பாடங்கள்

*திரு. புல்லோன் ஜோ லூயிஸ்*

என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை சுமந்து என்னைப் பின்பற்றட்டும் (மாற் 8:34), என்னும் இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிசாய்த்து பல்வேறு சோதனைகளுக்கும், துன்புறுத்தலுக்கும் ஆளானவர். அவரோடு இறப்போம் (யோவா 11:16) என்ற புனித தோமையாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தன் ஆழ்ந்த விசுவாசத்தையும் அசைக்க முடியாத பற்றுறுதியையும் பலகொடிய வேதனைகளிலும் தனது இறுதி மூச்சுவரை பாதுகாத்து சான்று பகர்ந்தவர். காற்றாடி மலைக் கதிரவனாய் இன்று உலகெங்கும் கிறிஸ்தவ நம்பிக்கையின் ஒளிக்கீற்றை பரவ விட்டு உயர்ந்து நிற்கும் மறைச்சாட்சி. அவரே இந்தியாவின் பொதுநிலையினருள் முதல் முத்திபேறு பெற்ற அருளாளர் தேவசகாயம். கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டாலம் என்னும் ஊரில் வாசுதேவன் நம்பூதிரி ரேவதி தம்பதியருக்கு 1712 ஏப்ரல் 23ம் நாள் நீலகண்டன் என்ற தேவசகாயம் பிள்ளை பிறந்தார். இவர் இயல்பிலேயே நல்லவர், நன்கு கற்றுத்தேர்ந்தவர். அவர் முதலில் போர் வீரராகவும், பின்னர் கோவில் பணியாளராகவும் இறுதியாக அரச கருவூலத்தில் பணியாற்றும் அரசவை அலுவரலாகவும் பணியாற்றினார். அவர் தம் நாயர் குலத்தைச் சார்ந்த பார்கவியம்மாள் என்பவரை மணம் முடித்தார்.

சேர நாட்டின் வாணிப நகரமான இரணியை டச்சுக்காரர்கள் கைப்பற்ற 1741ம் ஆண்டு படையெடுத்தனர். குளச்சலில் நடைபெற்ற போரில் மன்னன் மார்த்தாண்டவர்மனின் படைகள், டச்சுக்காரர்களைத் தோற்கடித்து, அப்போது போரில் பிடிபட்ட கைதிகளில் ஒருவர் பெனடிக்ட் டிலனாய் கொடுத்த விளக்கங்கள் நமக்கு ஏற்புடையதாய் உணர்ந்த நீலகண்ட பிள்ளை கிறிஸ்தவராக மாற விரும்பினார். அவரை நன்கு தயாரித்தப்பின் அருள்தந்தை ஜான் பாப்டிஸ்ட் புத்தாரி சே.ச நீலகண்ட பிள்ளைக்கு வடக்கண் குளத்தில் 1745ம் ஆண்டு மேமாதம் 14ம் நாள் லாசர் என்ற பெயரில் திருமுழுக்கு கொடுத்தார். லாசர் என்றால் தமிழில் தேவசகாயம் என்று பொருள். கிறிஸ்தவராக மாறிய இவர், பிறரும் கிறிஸ்தவ நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு அறிவுறித்தினார். அவ்வாறு கிறிஸ்துவத்தை தழுவியவருள் அவரது மனைவியும் ஒருவர். அருட்தந்தை பரஞ்ஜோதி நாதர் அவருக்கு ஞானப்பூ (தெரசா) என்று பெயரிட்டார்.

தாம் ஏற்றுக்கொண்ட புதிய நம்பிக்கையின் காரணத்தால் தேவசகாயம்பிள்ளை சாதி வேறுபாடுகளைக் களைந்தார். பிறப்பால் தாழ்ந்தவர்கள் என்று கருதப்பட்டோருடன் உணவருந்தி அவர்களோடு வாழ்ந்தார். கிறிஸ்தவ வாழ்வின் காரணமாக தேவசகாயத்திடம் காணப்பட்ட மாற்றங்களைக் கண்ட உயர் ஜாதியினர் அவர் ஒரு துரோகி எனவும், சமய செயல்பாடுகளை இகழ்பவராகவும், தெய்வங்களையும் அந்தணர்களையும் அரசு அரியணையையும் பழித்துரைப்பவராகவும் குற்றம் சாட்டினர். கிறிஸ்தவர்களுக்கு எதிராய் தூண்டிவிடப்பட்ட மன்னர் 1749 பிப்ரவரி 29ம் நாள் தேவசகாயத்தைக் கைது செய்தான். அவர் தொடர்ந்து பல்வேறு விதங்களில் சித்தரவதை செய்யப்பட்டார். எருமைமேல் அமரச் செய்து, அவமானத்தின் அடையாளமான எருக்கு மாலை அணிவிக்கப்பட்டு, பல்வேறு நகர்கள், ஊர்கள் வழியாக பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார். இத்தகு துன்பச் சூழலிலும் வினவங்கோடு வெட்டு வென்னியில் உப்பு நீரை குடிநீராக மாற்றினார். சுண்ணாம்புச் சூளைமீது நிறுத்தப்பட்டபோது முழந்தாளிட்டு செபித்தவராய் எவ்வித ஆபத்துமின்றி காப்பாற்றப்பட்டார்.

புலியூர் குறிச்சி என்னும் சிற்றூரில் தாகத்தால் தவித்த அவருக்கு பாறையிலிருந்து தண்ணீர் பீரிட்டு வந்தது. பெருவினை என்னும் ஊரில் ஏழு மாதங்களாய் இவரைக் கட்டி வைத்த பட்டுப்போன வேப்பமரம், துளிர்த்து, படர்ந்து செழிப்பாகி நிழலாய் நின்றது, மரண தண்டனை நிறைவேற்றும் ஆராச்சாரியாருக்கு, குழந்தைச் செல்வம் இல்லாத குறையை ஆராச்சாரரின் வேண்டுதலுக்கு இணங்க இறையருளால் குழந்தைச் செல்வம் பெற்றுத்தந்தார். காவலர்கள் அவருக்குக் கொடுத்த நஞ்சு கலந்த உணவு அவருக்கு எந்த நலக்கேட்டையும் தரவில்லை. இறுதியாய் அவர் ஆரல்வாய்மொழி சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். 1752ம் ஆண்டு ஜனவரி 14ம் நாள் இரவில் காற்றாடி மலையில் சுட்டுக் கொல்லப்பட்டார். காட்டு விலங்குகளுக்கு உணவாக வீசப்பட்ட அவரது உடலின் பகுதிகளை கிறிஸ்தவர்கள் தூய பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயப்

பீடத்தின் முன்பு அடக்கம் செய்தனர். இவ்வாலயமே இன்றைய கோட்டாறு மறைமாவட்ட பேராலயம் ஆகும்.

**இந்த புனிதர் இந்திய திருஅவைக்கு இன்று தரும் பாடங்கள் என்ன?**

நிறமும், இனமும், சமயமும், மொழியும் பிரித்துப் பார்ப்போரை கடிந்து, தகர்த்து இணைக்கும் பாலமாய் பாலன் இயேசு பாருக்கு வந்தது போல் உயரிய நம்பூதிரி குலத்தில் பிறந்து தாழ்த்தப்பட்டோர், குடிக்கும் குவளை முதற்கொண்டு வழிபாட்டுத் தலங்கள் வரை தனித்தனி என்ற காலத்தில் இவரும் அவர்களோடு உணவருந்தினார், வாழ்ந்தார். நவீன உலகத்தில் வாழும் நாம் அவரைப்போன்று முழுமையாக இல்லை என்றாலும், யாவரையும் வெறுத்து ஒதுக்காது, அரவணைத்து அன்பினை பகிர்ந்து கொள்வோம். நட்பிற்கு இலக்கணமாக, டிலனாயுடன் நல்ல நட்பு கொண்டு, நல்லது என்று தமக்கு அறிவுறுத்தியதை ஏற்று மனம் மாறினார், மற்றவர்களையும் மனம் மாற்றினார். விசுவாசத்தில் உறுதிபூண்டார். அவர்போல் நாமும் மனம் மாறுவோம், நண்பன்படும் துன்பத்தைப் பாதியாக்குவோம். துணை நிற்போம், வாழ்வில் நல்விளை நிலமாவோம்.

"உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள், உங்களைத் துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத் 5:39, 43-44) என்ற இறைவார்த்தையின்படி வாழ்ந்து காட்டினார் நம் அருளாளர் அனல் பறக்கும் வெயிலில் சூரைமுள் கொண்டு உடலைக் கீற அடித்து, மிளகு பொடியைத் தேய்த்த நிலையிலும், விளவங்கோடு வெட்டு வென்னியில், உப்பு நீரைக் குடிநீராய் மாற்றினார். இந்த அன்பு நிலையே அனைத்திலும் மேலானது, நாமும் நம்மைத் துன்புறுத்துவோரையும், நம்மை வெல்வோரையும் அன்பு செய்வோம். அவர்களுக்கு நிழலாய் இருப்போம். பெருவிளையில் பட்டுப்போன வேப்பமரத்தில் இறுக்கிக் கட்டி வைக்கப் பணித்த ஆராச்சாரருக்காக செபித்து அவருக்கு குழந்தைப் பேற்றைப் பெற்றுத்தந்தார். இந்த இரக்கச் செயல் நமது வாழ்விலும் துளிர்த்து மரமாகட்டும், செழிக்கட்டும்.

அவர் வாழ்ந்த 40 ஆண்டுகளில், 7 ஆண்டுகள் மட்டுமே அவரின் கிறிஸ்தவ வாழ்வு, இந்த 7 ஆண்டுகளிலும் 3 ஆண்டுகள் சிறைச்சாலையில் கொடும் வாதைகள் அனுபவித்தார். அவரின் மாசற்ற திரு இரத்தத்தால் திருச்சபையின் உண்மையையும், உயர்வையும் வெளிப்படுத்தினார்.

இந்த முதல் இந்திய பொதுநிலையினர், மறைசாட்சிக்கு திருத்தந்தை 16ம் பெனடிக்ட் "அருளாளர்" பட்டம் வழங்கி 2012ம் ஆண்டு டிசம்பர் 2ம் நாள் மேன்மையில் உயர்த்தினார். இறையேசு சொன்னதுபோல், அவர்தம் வாழ்வில் உப்பாக இருந்தார். உப்பைப்போல் கரைந்து அடுத்தவர் வாழ்வில் சுவை சேர்க்கின்ற நல்ல மனிதராகவும், உருகும் மெழுகாக அடுத்தவர் வாழ்வில் ஒளியேற்றி வழிகாட்டுகின்ற நல்ல மனத்தவராகவும் இருந்தார். நாமும் அவரைப்போல் நல்ல மனிதர்களாக இருக்க நம்மையே கரைப்போம், நம்மையே இழப்போம்.



# திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*

## ஜனவரி 2026-இல் முதல் கர்தினால்கள் ஆலோசனை அவைக் கூட்டம்

ஜனவரி 7, 8 ஆகிய தேதிகளில், வத்திக்கானில் இடம்பெறவிருக்கும் தனது முதல் கர்தினால்கள் ஆலோசனை அவைக் கூட்டத்தில், உலகம் முழுவதிலுமிருந்து வரும் கர்தினால்கள் ஒன்றுகூடி, திருத்தந்தை தனது முடிவுகளை எடுக்கவும், திருஅவையை வழிநடத்துவதில் அவருக்குத் தங்கள் ஆதரவையும் ஆலோசனையையும் வழங்கவும் உதவும் ஒரு முக்கியமான நிகழ்வாகும். ஜனவரி 6, செவ்வாய்க்கிழமையன்று கொண்டாடப்படும், திருக்காட்சிப் பெருவிழாவன்று, புனித பேதுரு பெருங்கோவிலில் புனிதக் கதவை மூடிய அடுத்த நாள், அதாவது, ஜனவரி 7, புதன்கிழமையன்று, திருப்பலியுடன் முதல் கர்தினால்கள் ஆலோசனை அவைக் கூட்டம் தொடங்கும். இக்கூட்டம் உரோமையில் உள்ளவர்கள் மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள அனைத்துக் கர்தினால்களும் சந்திக்கும் ஒரு சிறப்பு நிகழ்வாகும் என்றும், அனைத்துக் கர்தினால்களுடனும் முக்கியமான விடயங்களைக் குறித்து விவாதிக்க திருத்தந்தை இந்தக் கூட்டத்தைப் பயன்படுத்திக்கொள்வார் என்றும் தெரிவிக்கிறது திருப்பீடச் செய்தித் தொடர்பகத்தின் அறிக்கை

## இரக்கம், எதிர்நோக்கு மற்றும் நம்பிக்கைக்கு யோசேப்பு ஒரு முன்மாதிரி

திருவருகைக் காலத்தின் இறுதி நாட்களில், யோசேப்பின் மனப்பான்மைகளான இரக்கம், பணிவு, நம்பிக்கை மற்றும் இறைவேண்டலைப்

பின்பற்றுங்கள்" : திருத்தந்தை பதினான்காம் லியோ. சென்ற டிசம்பர் 21, ஞாயிறன்று, வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான திருப்பயணிகளுக்கு வழங்கிய நண்பகல் மூவேளை இறைவேண்டல் உரையில் இவ்வாறு மொழிந்தார் திருத்தந்தை. திருவருகைக் காலத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமையின் நற்செய்தி வாசகத்தை (காண்க. மத் 1: 18-24) மையமாகக் கொண்டு தனது சிந்தனைகளை விசுவாசிகளுடன் பகிர்ந்துகொண்டார் திருத்தந்தை.

**கனவில் கடவுளின் திட்டத்தை ஏற்றவர் :** ஆண்டவரின் தூதர் யோசேப்புக்கு கனவில் தோன்றி கூறிய செய்திக்குப் பிறகு, அவர் கடவுளின் திட்டத்தை ஏற்றுக்கொண்டபோது, அவருடைய நற்பண்புகள் இன்னும் அதிகமாக வெளிப்பட்டன என்று கூறிய திருத்தந்தை, தனது தனிப்பட்ட நலன்களை விடுத்து, தன் எதிர்காலத்தை முழுவதுமாக கடவுளிடம் ஒப்படைத்தார் என்று மொழிந்தார். விசுவாசிகள் அனைவரையும் புனித யோசேப்பு மற்றும் புனித அன்னை மரியாவின் பரிந்துரை செபத்தில் ஒப்படைத்து, அனைவரும் விசுவாசத்துடனும் அன்புடனும் கிறிஸ்துவை வரவேற்க வேண்டும் என்று இறைவேண்டல் செய்து தனது மூவேளை செப உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை.

## யூபிலி ஆண்டு முடிவுறும் வேளையில் எதிர்நோக்கில் நிலைத்திருங்கள்

யூபிலி ஆண்டு நிறைவடையும் வேளையில், எதிர்நோக்கு மனித மற்றும் ஆன்மிக வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றும், கிறிஸ்தவர்கள் எதிர்நோக்குடன் வாழ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை லியோ. எதிர்நோக்கு என்பது திருஅவையின் சிறப்பு யூபிலி ஆண்டுடன் முடிவடைந்துவிடுவதில்லை, மாறாக, அது மனிதகுலத்திற்கு எப்போதும் தேவைப்படும் ஒன்று என்று மொழிந்த திருத்தந்தை, எதிர்நோக்கு இல்லாமல், வாழ்க்கை வாடி வதங்கிவிடும் என்றும், அதேவேளையில் எதிர்நோக்குத்தான் கடவுள் வழியாக புதுப்பித்தல் மற்றும் புதிய வாழ்க்கையைப் பிறப்பிக்கிறது என்றும் எடுத்துக்காட்டினார். எதிர்நோக்கு என்பது உயிரை உருவாக்குவதாலும், கடவுளின் அன்பைப் பிரதிபலிப்பதாலும், அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறையை விட வலிமையானது என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, உலகின் தற்போதைய நிலையை, இயேசுவினுடைய வருகைக்காகவும், அவருடைய அரசுக்காகவும் இறை இரக்கத்தின் முழுமைக்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கும் பிரசவ வேதனையில் இருக்கும் ஒரு பெண்ணுடன் ஒப்பிட்டுக்காட்டினார்.

**மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள் :** மரியாவை எதிர்நோக்கின் மாதிரியாக எடுத்துக்காட்டிய திருத்தந்தை, நம் வாழ்க்கையில் எதிர்நோக்கிற்கு உயிர்க்கொடுத்து, செயல்கள் வழியாகவும், கடவுளுடைய வார்த்தையை வெளிப்படுத்துவதன் வழியாகவும், அன்னை மரியாவுடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார் திருத்தந்தை.

# சுடர் வாசகர் போட்டி 129

## சரியான விடைகள்

1. தூய யுவான் டியேகோ, 1531 டிசம்பர் 9ம் நாள்
2. 1990ம் ஆண்டு ஏப்ரல் 29ம் நாள்
3. வியாபாரி ஒருவர்
4. புனித பிரான்சிஸ் சவேரியார்
5. நோன்பிருந்து, செபித்து
6. கான்டி நகர்ப் புனித ஜான்
7. புனித யாக்கோபு
8. "இதோ வானம் மின்னுவதையும், மனுமகன் நிற்பதையும் காண்கிறேன் என்றார்".
9. யோபு 1: 21
10. புனித சூசையப்பர்
11. கிறிஸ்தவள்
12. 1858ம் ஆண்டு, பெர்னதெத் சிறுமிக்கு
13. கடவுள் மனிதன் மீது கொண்ட நிலையான அன்பை நித்தியத்திற்கும் வெளிப்படுத்தும் பெருவிழா
14. திருத்தந்தை லியோ
15. நற்செய்தியின்படி வாழும் வாழ்க்கை



## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr. S. Alex, Karaikal
Mr. Irudayaraj, Bangalore
Ms. Agnes, Katpadi

# சுடர்
## வாசகர் போட்டி
## 130



1. இயேசு திருமுழுக்குப் பெற்றவுடன் என்ன நிகழ்ந்தது?
2. "ஒரு போதும் தேவத்தாயின் பக்தியை மறக்காதே" என்று கூறியது யார்?
3. "அமலோற்பவ மாதாவின் கார்மேல் சபை" என்று பெயரிட்டவர் யார்?
4. ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழாவின் 4 சிறப்பு அம்சங்கள் யாவை?
5. புனித தேவசகாயம் பிள்ளைக்கு திருமுழுக்குக் கொடுத்தவரின் பெயரென்ன?
6. கி.பி. 356ம் ஆண்டு கொல்சீம் குன்றில் இறைவனடி சேர்ந்தவர் யார்?
7. புனித தொன் போஸ்கோ எத்தனை நாட்கள், எதற்காக அழைக்கப்பட்டிருந்தார்?
8. "திமொத்தேயு" என்கிற பெயரின் பொருள் என்ன?
9. "அம்மா உங்களை மீண்டும் கடவுளிடம் சேர்க்க விரும்பி என்னையே இயேசுவுக்கு அர்ப்பணித்து விட்டேன்" யார் கூறியது?
10. புனித பிரான்சிஸ் சலேசியார் எத்தனைப் புத்தகங்களை எழுதினார்?
11. யோவான் 8: 32ல் இயேசு கூறும் செய்தி என்ன?
12. வடக்கண் குளத்தில் நீலகண்ட பிள்ளைக்கு எந்த ஆண்டு எந்நாளில் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது?
13. குருவானவர்களுக்கும் கன்னியர்களுக்கும் மிக்கேல் எனும் சபையை எந்த ஆண்டு யாரால் நிறுவப்பட்டது?
14. புனித பிரான்சிஸ் தெளிந்த பார்வையுடன் எந்தப் பணியைத் தொடங்கினார்?
15. மறைக்கல்வியின் வகைகள் யாவை?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிகாட்டி

ஆண்டின் பொதுக்காலம் 4ம் ஞாயிறு
ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா
புனித ஜான் தெ பிரிட்டோ
புனித ஆகத்தா
புனித கொன்சாலோ கார்சியா
ஆண்டின் பொதுக்காலம் 5ம் ஞாயிறு
அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ்
புனித ஸ்கொலாஸ்திகா
லூர்துநகர் புனித அன்னை மரியா
புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் ஆயர்
ஆண்டின் பொதுக்காலம் 6ம் ஞாயிறு
மரியின் ஊழியர் சபை நிறுவிய ஏழு புனிதர்கள்
திருநீற்றுப்புதன் தவக்காலம்
புனித பீட்டர் தமியான்
தவக்காலம் முதல் ஞாயிறு
புனித போலிக்கார்ப்பு
புனித லூயிஜி வெர்சிலியா மற்றும் புனித கலிஸ்துஸ் கரவாரியோ

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

9ம் பயஸ் கண்ட சலேசியம்
திருநீரு அணிவோம் திருந்தி வாழ்வோம்
சிலுவைப் பாதை
திருஅவை செய்திகள்

# ஜனவரி மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | வி | புனித கன்னி மரியா கடவுளின் தாய் பெருவிழா | I. எண். 6: 22-27<br>II. கலா. 4: 4-7 | லூக். 2: 16-21 |
| 02 | வெ | புனித பேசில், நசியான் கிரகோரி, ஆயர்கள் | 1யோவா. 2: 22-28 | யோவா. 1:19-28 |
| 03 | ச | இயேசுவின் தூய்மைமிகு பெயர் | 1யோவா. 2: 29-3:6 | யோவா. 1: 29-34 |
| **04** | **ஞா** | **ஆண்டவருடைய திருக்காட்சி பெருவிழா** | I. எசா. 60: 1-6<br>II. எபே. 3: 2-3, 5-6 | மத். 2: 1-12 |
| 05 | தி | | 1யோவா. 3: 22-4: 6 | மத். 4: 12-17, 23-25 |
| 06 | செ | | 1யோவா. 4: 7-10 | மாற்கு 6: 34-44 |
| 07 | பு | | 1யோவா. 4: 11-18 | மாற்கு 6: 45-52 |
| 08 | வி | | 1யோவா. 4: 19-5: 4 | லூக். 4: 14-22 |
| 09 | வெ | | 1யோவா. 5: 5-13 | லூக். 5: 12-16 |
| 10 | ச | | 1யோவா. 5: 14-21 | யோவா. 3: 22-30 |
| **11** | **ஞா** | **ஆண்டவருடைய திருமுழுக்கு விழா** | I. எசா. 42: 1-4, 6-7<br>II. திப. 10: 34-38 | **மத். 3: 13-17** |
| 12 | தி | புனித ஹிலாரி | 1சாமு. 1: 1-8 | மாற்கு 1: 14-20 |
| 13 | செ | புனித தேவசகாயம் பிள்ளை | 1சாமு. 9-20 | மாற்கு 1: 21-28 |
| 14 | பு | | 1சாமு. 3: 1-10, 19-20 | மாற்கு 1: 29-39 |
| 15 | வி | | 1சாமு. 4: 1-11 | மாற்கு 1: 40-45 |
| 16 | வெ | புனித அந்தோணியார் | 1சாமு. 8: 4-7, 10-22 | மாற்கு 2: 1-12 |
| 17 | ச | | 1சாமு. 9: 1-4, 17-19, 10:1 | மாற்கு 2: 13-17 |
| **18** | **ஞா** | **ஆண்டின் பொதுக்காலம் 2ம் ஞாயிறு** | I. எசா. 49: 3.5-6<br>II. 1கொரி. 1: 1-3 | **யோவா. 1: 29-34** |
| 19 | தி | புனித பபியான், புனித செபஸ்தியார் | 1சாமு. 15: 16-23 | மாற்கு 2: 18-22 |
| 20 | செ | புனித ஆக்னஸ் - கன்னி | 1சாமு. 16: 1-13 | மாற்கு 2: 23-28 |
| 21 | பு | | 1சாமு. 17: 32-33, 37, 40-50 | மாற்கு 3: 1-6 |
| 22 | வி | புனித வின்சென்ட் | 1சாமு. 18: 6-9, 19: 1-7 | மாற்கு 3: 7-12 |
| 23 | வெ | | 1சாமு. 24: 2-20 | மாற்கு 3: 13-19 |
| 24 | ச | சலேசு நகர் புனித பிரான்சிஸ் | 1சாமு. 1: 1-4, 11-12, 19, 23-27 | மாற்கு 3: 20-21 |
| **25** | **ஞா** | **ஆண்டின் பொதுக்காலம் 3ம் ஞாயிறு** | I. எசா. 9: 1-4<br>II. 1கொரி. 1: 10-13.17 | **மத். 4: 12-23** |
| 26 | தி | இந்தியக் குடியரசு நாள் | 2திமொ. 2:1-6 | மாற்கு 3: 22-30 |
| 27 | செ | புனித ஆஞ்சலா மெரிச்சி | 2சாமு. 6: 12-15, 17-19 | மாற்கு 3: 31-35 |
| 28 | பு | அக்குயினோ நகர்ப் புனித தாமஸ் | 2சாமு. 7: 4-17 | மாற்கு 4: 1-20 |
| 29 | வி | | 2சாமு. 7: 18-19, 24-29 | மாற்கு 4: 21-25 |
| 30 | வெ | | 2சாமு. 11: 1-4, 5-10, 13-17 | மாற்கு 4: 26-34 |
| 31 | ச | புனித தொன் போஸ்கோ | 2சாமு. 12: 1-7, 10-17 | மாற்கு 4: 35-41 |


TO SHARE THE LIGHT
தீபகம்
தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
45, லேண்டன்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-600010
இல்லம் தேடி இறையரசு
• அன்பு • உண்மை • நீதி • சமத்துவம்
மக்களுக்கு மாபெரும் நற்செய்தி!!!
குழந்தைகள், பெரியவர்கள், இளையோர், முதியோர்
அனைவரும் வருக! நன்மை பெறுக!!
குருத்துவ துறவற அழைத்தலை பற்றி அறியவும்
இளையோருக்கான மன அமைதிக்கு வழிகாட்டவும்
இளையோருக்கான வேலை வாய்ப்பை அறியவும்
சிறுபான்மையோருக்கான அரசு நலன்களை அறியவும்
இளையோருக்கான திருமண தகவல் அறியவும்
அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான அரசு நலன்களை அறியவும்
இளையோரின் குடிபோதையை ஒழிக்க ஆலோசனை பெறவும்
மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு நலன்களை அறியவும்
விரைவில்...


தீபகச் சுடர் வாசகர்கள், உபகாரிகள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும்
இனிய புத்தாண்டு & பொங்கல் விழா நல்வாழ்த்துக்கள்

# ECO CHRISTMAS 2025

*Celebrating Christmas in the Light of Faith*

***A Call to Responsible Simplicity & Care for Creation***

**"It is my hope that our seminaries and houses of formation will provide an education in responsible simplicity of life, in grateful contemplation of God's world, and in concern for the needs of the poor and the protection of the environment." – Pope Francis**

**(Laudato Si 214)**



Through ECO Christmas 2025, Deepagam invites all Salesian institutions, Parishes and houses of the Chennai Province to celebrate the joy of Christmas in a spirit of simplicity, gratitude, and responsible care for creation.

**Erect one ECO Christmas Tree**

**Avoid plastic, fancy, and non-biodegradable decorations**

**Use nature-friendly, reusable and repurposed materials reflecting faith and creativity in decoration**

**THE ECO CHRISTMAS TREE INITIATIVE**

**A SIMPLE STEP. A SHARED WITNESS**

Share photos and a short video of the ECO Christmas Tree by 10th January 2026 to deepagamdonbosco@gmail.com or WhatsApp : 84387 54518

Contribute to Province-level initiative of ecological efforts


*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)

*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT

*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**